விலை ரூபா: 8.00
Registered as a Newspaper in Srilanka
# வலம்புரி
Valampurii
பக்கங்கள்:- பன்னிரண்டு
சங்கு 06 வள்ளுவர் ஆண்டு 2036 புரட்டாதி 05 புதன்கிழமை (21.09.2005) தொலைபேசி 222 3378, 222 7644 ஒலி 276

ராம்கோ
MADRAS CEMENTS LTD
ஆசியாக் கண்டத்தில் முதலாம்தரத் தொழிற் சாலையிலிருந்து தயாரிக்கப்பட்டது
RAMCO CEMENT
சீமெந்து

# இலங்கையில் நிலவும் இனப்பிரச்சினைக்கு சமஷ்டி அடிப்படையிலான தீர்வே ஒரேவழி!

## இணைத் தலைமை நாடுகள் வலியுறுத்து

(நியூயோர்க்)

சமஷ்டித் தீர்வினை அடிப்படையாகக்கொண்டு நடாத்தப்படுகின்ற பேச்சுவார்த்தை மூலமான தீர்வே, இலங்கையின் இனப்பிரச்சினையை முடிவுக்குக் கொண்டுவரக்கூடிய ஒரேவழியென இலங்கைக்கு உதவிவழங்கும் நாடுகளின் இணைத் தலைமை தெரிவித்துள்ளது. நியூயோர்க்கில் நேற்று முன்தினம் ஒன்றுகூடிய இலங்கைக்கு உதவிவழங்கும் நாடுகள், இலங்கை இனப்பிரச்சினை தொடர்பாக ஆராய்ந்த பின்னர் இத்தகவலை வெளியிட்டுள்ளன.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## தடுத்துவைக்கப்பட்டுள்ள பொலிஸாருடன் உறவினர்கள் நேற்றுக் கலந்துரையாடல்



தமிழீழ நீதிமன்றத்தின் உத்தரவின்பேரில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள 3 பொலிஸாரையும் அவர்களது பெற்றோர்கள் நேற்றுச் சந்தித்துப் பேசினர். சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் மூலம் இச்சந்திப்பிற்கான ஏற்பாடு செய்து கொடுக்கப்பட்டது. (12 ஆம் பக்கம் பார்க்க)

## பொதுமக்களின் பிரச்சினைகளுக்கு ஜனாதிபதியானதும் நிரந்தரத் தீர்வு!

### மகிந்த ராஜபக்ஷ உறுதி

(கொழும்பு)

பொதுமக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் அனைத்திற்கும் நிரந்தரமான நடைமுறைத் தீர்வினை நாம் ஏற்படுத்துவோம். அதுகுறித்து மக்களுக்கு நாம் விளக்கிவருகிறோம் என பிரதமரும், சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் வேட்பாளருமான மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

இனப்பிரச்சினை விடயத்தில் அதனைத் தீர்ப்பதற்கான வழிவகைகள் குறித்து ஆராய்ந்து வருவதாகப் பிரதமர் தெரிவித்தார்.

இலங்கையின் எதிர்காலம் குறித்து எந்த விதமான தொலைநோக்குப் பார்வையும் கிடையாது என்று ஐ.தே.கட்சி கூறியதை மறுத்த பிரதமர், இளைஞர் விவகாரம் குறித்து தான் முன்னர் தொழில் அமைச்சராக இருந்தபோது செயற்பட்ட விதம், இலங்கையின் எதிர்காலம் குறித்து தனது தொலைநோக்குடனான பார்வைக்கு ஒரு எடுத்துக்காட்டென அவர் கூறினார்.

இலங்கையைத் தொடர்ந்து ஒரு விவசாய நாடாகப் பேணப்போவதாகவும், நாட்டின் ஏனைய பிரச்சினைகளுக்கு தீர்வுகாணும் அதேநேரம், அதற்குச் சமமாக இனப்பிரச்சினைக்கும் ஒரு (12 ஆம் பக்கம் பார்க்க)

## பொலிஸாரின் விடுதலை குறித்து தமிழீழ நீதிமன்றமே முடிவெடுக்கும்

### க.கா.குழுவுக்கு கடிதம்

(கிளிநொச்சி)

மன்னார் அரிப்புப் பகுதிக்குள் அனுமதியின்றி நுழைந்தபோது கைதுசெய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள மூன்று பொலிஸாரையும் விடுதலை செய்வதா அல்லது தொடர்ந்து தடுத்துவைப்பதா என்பது குறித்து தமிழீழ நீதிமன்றமே முடிவுசெய்யுமென தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் தெரிவித்துள்ளார்.

கண்காணிப்புக்குழுவுக்கு அனுப்பிவைத்துள்ள கடிதத்திலேயே அவர் இதனை தெரிவித்துள்ளார்.

தமிழீழ நீதிமன்றின் உத்தரவையடுத்து விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள பொலிஸார் மூவரையும் உடனடியாக விடுதலை செய்யுமாறு யுத்தநிறுத்த கண்காணிப்புக் குழுவின் தலைவர் விடுதலைப் புலிகளுக்கு மூன்று கடிதங்களை அனுப்பியிருந்தார்.

அதற்கு பதிலளிக்கும் முகமாகவே தமிழ்ச்செல்வன் இக்கடிதத்தினை அனுப்பிவைத்துள்ளார்.

இதேவேளை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள மூன்று பொலிஸாரும் எதிர்வரும் 27 ஆம் திகதி (12 ஆம் பக்கம் பார்க்க)

## சமாதானத்தை வலியுறுத்தி கொழும்பில் இன்று பேரணி

(கொழும்பு)

அனைத்துலக சமாதான நாளை முன்னிட்டு இலங்கைத் தேசிய சமாதானப் பேரவை சமாதானப் பேரணியையும், ஒன்றுகூடலையும் இன்று கொழும்பில் நடத்தவுள்ளது.

பிரதமர் மகிந்த ராஜபக்ஷ, எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் ரவிராஜ், இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் தலைவர் ஆறுமுகன் தொண்டமான், முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் ஆகியோருக்கு இந்த நிகழ்வில் கலந்துகொள்ளுமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

நீதியாகவும் - சுதந்திரமாகவும் தேர்தலை நடத்துதல், போர்நிறுத்த உடன்படிக்கையைத் தொடர்ந்தும் கடைப்பிடித்தல், யார் வெற்றிபெற்றாலும் ஓர் அடிப்படை இணக்கப்பாட்டினை அடிப்படையாக வைத்து சமாதானப் பேச்சுக்களை முன்னெடுத்துச் செல்லல் போன்ற கோரிக்கைகள் அடங்கிய மகஜர் ஒன்றும் பிரதமர் மகிந்த ராஜபக்ஷ மற்றும் எதிர்க்கட்சித் தலைவர் ஆகியோரிடம் (12 ஆம் பக்கம் பார்க்க)

## தேர்தல் விதிகளை அமுலாக்க தேர்தல் திணைக்களம் தீவிரம்

(கொழும்பு)

தேர்தல் விதிமுறைகளை தேர்தல் திணைக்களம் தீவிரமாக நடைமுறைப்படுத்திவருகிறது. ஜனாதிபதித் தேர்தல் எதிர்வரும் 17 ஆம் திகதி நடைபெறவுள்ளதாக உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதையடுத்து தேர்தல் விதிமுறைகளுக்கு எதிராக வைக்கப்பட்டுள்ள அரசியல் தலைவர்களின் சுவரொட்டிகள், உருவப்படங்கள் உள்ளிட்டவைகளை அகற்ற பொலிஸாருக்கு தேர்தல் திணைக்களம் உத்தரவிட்டுள்ளது.

வெளிப்படையான, சுதந்திரமான தேர்தலை நடத்துவதற்காகவே இத்தகைய தீவிர நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதாக தேர்தல் திணைக்கள அதிகாரிகள் தெரிவித்தனர்.

இதையடுத்து கொழும்பு மற்றும் அதன் புறநகர்ப் பகுதிகளில் சுவரொட்டிகள், பதாகைகள் என்பவற்றை அகற்றும் பணியில் பொலிஸார் தீவிரமாக ஈடுபட்டுவருகின்றனர்.

தேர்தல் நடைபெறும் இக்காலத்தில் சட்டம் ஒழுங்கை பாதுகாக்க 65 ஆயிரம் (12 ஆம் பக்கம் பார்க்க)

## கிழக்குப் பல்கலைக்கழக மாணவர்கள் நேற்று வீதியை மறித்து ஆர்ப்பாட்டம்



(மட்டக்களப்பு)

கிழக்குப் பல்கலைக்கழக மாணவர்கள் நேற்று பாரிய எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் ஒன்றில் ஈடுபட்டனர். கடந்தவாரம் கிழக்குப் பல்கலைக்கழக பீடாதிபதி திருமதி ரூபி வலண்டினாவின் வீட்டின் மீது கைக்குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டமையைக் கண்டித்தும், அப்பாவி மக்கள் படுகொலை செய்யப்படுவதை நிறுத்தக் கோரியுமே இந்த (12 ஆம் பக்கம் பார்க்க)

EXPOAIR
your friend in the skies...
ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள்
021 - 222 3891, 222 6297, 0777-2349999,
011-2372952/3, 011-2360290/1
e.mail:- jaffna@expoavi.com,reservations@expoavi.com.

எக்ஸ்போ ஏயார்
வானத்தில் உங்கள் நண்பன்...

இலங்கையில் முன்னணி வகிக்கும் உள்ளூர் விமான சேவை...

# ஆண் இனம் அழியப்போகிறதா?

எத்தனை பெண்குழந்தை இருந்தாலும் ஆண்குழந்தை இல்லையே என்ற வருத்தம் உள்ளவர்கள் பலர் உண்டு.

சிலர் வரிசைகளாக பெண்குழந்தைகளை பெற்றுவிட்டு அடுத்தது கண்டிப்பாக ஆண் குழந்தை பிறக்கும் என்ற நம்பிக்கையுடன் முயற்சி செய்பவர்களும் உண்டு.

ஆனால் அவர்களின் நம்பிக்கைக்கும் முயற்சிக்கும் ஆபத்து வரப்போகிறது என்று ஒரு தகவல் சமீபத்தில் வெளியானது.

விஞ்ஞானிகளின் இந்தத் திடுக்கிடும் அறிவிப்பு ஆண்களை கலங்கடித்துள்ளது. அது என்னவென்றால் இன்னும் நூறு இலட்சம் ஆண்டுகளுக்குப் பிறகு ஆண்குழந்தைகள் பிறக்காது. பிறக்கும் குழந்தைகள் எல்லாம் பெண்ணாகத்தான் இருக்கும்.

இதற்குக் காரணம் –ஆண் விந்தணுவில் உள்ள (ஆண்குழந்தை பிறக்ககாரணமாக இருக்கும்) 'ஓய்' குரோமோசோம்கள் கொஞ்சம் கொஞ்சமான அழிந்து வருவது தான்.

பொதுவாக ஆண்குழந்தை பிறக்கவேண்டுமானால் ஆண்களின் உயிரணுக்களில் உள்ள 'ஓய்' குரோமோசோம்களும் பெண்ணின் சினை முட்டையில் உள்ள 'ஓய்' குரோமோசோம்களும் இணைய வேண்டும். அப்போது தான் ஆண்குழந்தை பிறக்கும்.

அதற்கு மாறாக பெண்ணின் சினை முட்டையில் உள்ள 'எக்ஸ்' குரோம சோம்களும் ஆண்களின் உயிரணுவில் உள்ள எக்ஸ் குரோம சோம்களும் இணையும் போது பெண்குழந்தைகள் பிறக்கின்றன.

விஞ்ஞானிகள் சொல்கிறபடி பார்த்தால் ஆண்குழந்தைகளை உருவாக்கும் ஓய் குரோமசோம்கள் ஆண்களிடம் இருந்து அழிந்து விட்டால் ஆண்களை காட்டிலும் பெண்குழந்தைகளே அதிகளவு பிறக்கும் சூழ்நிலை உருவாகும். இதனால் ஒரு கட்டத்தில் மனித விருத்தியே தடைப்படும் சூழ்நிலை உருவாகலாம் என்று விஞ்ஞானிகள் பயமுறுத்தியுள்ளனர்.

இது உண்மைதானா என்பதை அறிய கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்தில் பணிபுரியும் உயிர் மருத்துவ விஞ்ஞானி டேவிட்பேஜி இதைப்பற்றிய ஆய்வை மேற்கொண்டார். ஆய்வின் முடிவில் அப்படி எதுவும் நடக்க வாய்ப்பில்லை என்று தெரிவித்தார்.

இருப்பினும் இதுபோன்ற ஓய் குரோமோசோம்கள் அழிந்து வருவது ஒரு சில குடும்பங்களை சார்ந்தவர்களுக்கு நிகழும் வாய்ப்பு உள்ளது என்றார்.

ஓய் குரோமோ சோம்கள் பல நூறு கோடி ஆண்டுகளாக இருந்து வருகிறது. அதாவது உயிரினம் குறிப்பாக மனித இனம் பல நூறு கோடி ஆண்டுகளாக இருந்து வருகிறது.

இந்த காலகட்டத்தில் சில மாற்றங்கள் மனிதனின் உடலில் ஏற்பட்டுள்ளது. இது போல அவனது உயிரணுவிலும் மரபணுவிலும் சில மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. இத்தகைய மாற்றங்களால் மனித குலத்திற்கு துளியளவும் பாதிப்பில்லையென்றும் தெரிவித்துள்ளார். அவரால் அதற்கு சரியாக ஆதாரங்களைக் காட்டமுடியவில்லை.

என்றாலும் மனித குலத்திற்கு இப்போதைக்கு ஆபத்தில்லை என்று மட்டும் தெரிவித்தார். ஆனால் அவரின் கூற்றை விஞ்ஞானிகள் ஒட்டுமொத்தமாக மறுத்துவருகின்றனர்.

ஆண்குழந்தைகளை உருவாக்கும் ஓய் குரோமோ சோம்கள் ஆண்களிடம் வேகமாக குறைந்து வருகின்றது என்றும் நூறு இலட்சம் ஆண்டுகளுக்குப் பிறகு முழுமையாக குறைந்துவிடும் என்று தெரிவித்தார்.

இரு தரப்பினரும் சொல்வதில் யார்சொல்வது உண்மை என்பது குழப்பம் நிலவி வருகிறது. இது உண்மையா இல்லையா என்பது இன்னும் போகப்போகத்தான் தெரியும் என்று விஞ்ஞானிகள் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

சமீப காலமாக நடந்த ஆய்வுகளில் ஆண்களின் மரபணுக்கள் கொஞ்சம் கொஞ்சமாக பாதிக்கப்பட்டு வருவது தெரிய வந்துள்ளது. தவறான உணவுப் பழக்கவழக்கங்கள் இளைய தலைமுறையின் மரபணுக்கள் பாதிப்பது அதிகரித்துள்ளது.

வாரிசுகள் பெற்றுக்கொடுக்க முடியாதளவிற்கு சில இளைஞர்களின் விந்தணுக்கள் பல வீனமாக உள்ளது. இந்த நிலைக்கு சுற்றுப்புறச் சூழல் மாசு பட்டிருப்பதும் ஒரு காரணமாக கருதப்படுகின்றது.

எது எப்படியோ வருங்காலம் ஆண்களுக்கு மட்டுமன்றி பெண்களுக்கும் வளமாக அமைய அவர்கள் நல்ல பழக்கவழக்கங்களுடன் சாதாரணமான முறையில் தங்கள் வாழ்க்கையை அமைத்துக்கொள்வதுதான் சிறந்தது. (ற)

## தரம் –1 மாணவர் அனுமதி விபரம் இவ்வாரம் இணையத்தளத்தில்

(கொழும்பு)

தேசிய பாடசாலைகளில் முதலாம் வகுப்பில் சேர்த்துக்கொள்ளப்படும் பிள்ளைகள் தொடர்பான இறுதிப்பட்டியல் இந்த வாரம் இணையத்தளத்தில் சேர்க்கப்படுமென்று கல்வியமைச்சு தெரிவித்துள்ளது.

மாணவர் அனுமதி தொடர்பான மேன்முறையீட்டு ஆட்சேப மனுக்கள் பெருமளவு விசாரித்து முடிக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் மேன்முறையீட்டு ஆணையாளர் ஜீ.சமரசேகர தெரிவித்துள்ளார்.

முதலாம் வகுப்பில் மாணவர்கள் சேர்த்துக்கொள்ளும் நடைமுறை தொடர்பாக கிடைத்த மேன்முறையீட்டு ஆட்சேப மனுக்களின் எண்ணிக்கை 7ஆயிரத்து 500ஐ எட்டுகிறது.

விசேட விசாரணைக்குழுக்களின் மூலம் அவை விசாரிக்கப்பட்டு வருகின்றது. இந்த நடைமுறை அடுத்த மாதம் 15ஆம் திகதி அளவில் முழுமையாக பூர்த்தியாக்கப்பட்டுவிடுமென்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற-7)

## ஆலோசனைக் கூட்டம்

சாவகச்சேரி நகர மீள் நிர்மாணம் பற்றிய முக்கியமான ஆலோசனைக்கூட்டம் எதிர்வரும் 23ஆம் திகதி சாவகச்சேரி இந்துக்கல்லூரியில் நடைபெறவுள்ளது.

யாழ்.மாவட்ட அரசாங்கஅதிபர் க.கணேஷின் ஏற்பாட்டில் நடாத்தப்படவுள்ள இந்த ஆலோசனைக்கூட்டத்தில் நகர அபிவிருத்தி அதிகாரசபையின் உயர்மட்ட அதிகாரிகள், கல்வியியலாளர்கள் மற்றும் திணைக்களத் தலைவர்கள் பங்குபற்றவுள்ளனர் எனத்தெரிய வருகிறது. சாவகச்சேரி நகரப்பகுதி 2120 மில்லியன் ரூபா செலவில் புனரமைக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (து-16)

## தேர்தல் பணிக்கு அரசு கோரினால் உதவி வழங்க க.கா.குழு தயாராம்

(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தல் தொடர்பாக அரசாங்கம் கேட்டுக்கொண்டால் உதவி செய்ய தயாராக இருப்பதாக இலங்கை போர்நிறுத்தக்கண்காணிப்புக்குழு தெரிவித்துள்ளது.

கண்காணிப்புக்குழுவின் பேச்சாளர் ஹெல்கா ஒலப்ஸ் டொட்டிர் இது குறித்து தெரிவிக்கையில் தேர்தலைப்பொறுத்தவரை கண்காணிப்புக்குழுவின் பணிகள் மிகக் குறைவுதான். கடந்த தேர்தலிலும் கூட மிகக் குறைவான பங்களிப்புத்தான் செய்தோம்.

தேர்தலின்போது விடுதலைப்புலிகள் மற்றும் அரச தரப்புப்பிரதேசங்களிற்கிடையேயான சோதனைச்சாவடிகளை கண்காணிப்புக்குழு கண்காணிக்க முடியும்.

விடுதலைப்புலிகளின் பகுதியில் இருந்து அரச பகுதிக்கு வாக்களிக்கச்செல்வோர் மீதான கெடுபிடிகள் இந்த கண்காணிப்புக் குழுவின் மூலம் குறையக்கூடுமென்றார். (ற)

## வெளிநாட்டில் வேலைசெய்யும் பணிப்பெண்களுக்கு சம்பள அதிகரிப்பு

(கொழும்பு)

வீட்டுப் பணிப்பெண்களாக வெளிநாடு செல்பவர்களுக்கு 30 ஆயிரம் ரூபாவை சம்பளமாக பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுக்கத்திட்டமிட்டுள்ளதாக தொழிலமைச்சர் அதாவுட செனவிரத்ன தெரிவித்தார்.

இது தொடர்பாக பணிப்பெண்களாக வேலைக்குச் செல்லும் நாடுகளின் தொழிலமைச்சர்களுடன் கலந்துரையாடி இணக்கம் காணவுள்ளதாக அமைச்சர் குறிப்பிட்டார்.

தற்போது பணிப்பெண்ணாகச் செல்லும் ஒருவருக்கு 10ஆயிரம் ரூபாவே சம்பளமாக வழங்கப்படுகிறது என்றும் அந்தத்தொகை போதியளவு இல்லையென்றும் அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

எதிர்பார்க்கப்படும் சம்பளம் கிடைக்காத சந்தர்ப்பத்தில் சம்பந்துப்பட்ட நாடுகளுக்கு பணிப்பெண்களை அனுப்புவதை தடைசெய்வதற்கான தீர்மானம் ஒன்றை எடுப்பது குறித்தும் கவனம் செலுத்தப்பட்டு வருவதாக அமைச்சர் தெரிவித்தார்.

வெளிநாடு சென்ற இலங்கையர்கள் அந்தநாடுகளில் எதிர்நோக்கும் பலதரப்பட்ட பிரச்சினைகளுக்கு தீர்வுகண்டு அவர்களுக்கு தொழில் பாதுகாப்பு அளிப்பதற்குத்தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் நடவடிக்கையெடுத்துவருவதாக அமைச்சர் மேலும் தெரிவித்தார். (து-9)

## துப்பாக்கி முனையில் துணிகரக் கொள்ளை
### பட்டப்பகலில் கைவரிசை

(கொழும்பு)

கொள்ளுப்பிட்டியில் அமைந்துள்ள பிரபல நகைக்கடை ஒன்றில் இருந்து பல இலட்சம் ரூபா பெறுமதியான தங்க நகைகள் கொள்ளையிடப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் மாலை 4.15மணியளவில் ஆர்.ஏ.டி.மெல்மாவத்தையில் உள்ள லலிதா ஜுவலஸ் என்ற பிரபல நகைக்கடையிலேயே இக்கொள்ளைச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இரு ஊர்திகளில் வந்த பெண் ஒருவர் இக்கொள்ளையில் ஈடுபட்டுவிட்டுதமது ஊர்தியை அங்கே விட்டுச்சென்றுள்ளனர். இச்சம்பவம் பற்றி பொலிஸார் தெரிவிக்கையில், நகைக்கடைக்குள் வாடிக்கையாளர்கள் போல் வந்த இளம்பெண் ஒருவரும் இளைஞர் ஒருவரும் நகைகள் பார்ப்பது போல் பாசாங்கு செய்து கொண்டிருந்த வேளை இன்னும் மூன்று நபர்கள் கடையில் நின்ற பாதுகாப்பு ஊழியர்களை உள்ளே தள்ளியபடி நுழைந்து துப்பாக்கி முன்னிலையில் அனைவரையும் கீழே நிலத்தில் இருக்கச் செய்துள்ளனர்.

இவர்கள் நீல நிறடொல்பின் ரக ஊர்தியொன்றை கைவிட்டுச்சென்றுள்ளனர். இது இவர்கள் கொள்ளையிட்ட ஊர்தியாக இருக்கலாம் என தாம் சந்தேகிப்பதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இக் கொள்ளைச் சம்பவம் தொடர்பாக இதுவரை எவரும்கைது செய்யப்படவில்லை கொள்ளுப்பட்டி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி இன்ஸ்பெக்டர் பாலிதப்பெர்ணான்டோ தலைமையிலான பொலிஸ் குழு விசாரணைகளை மேற்கொண்டுள்ளது. (ற)

## பதுங்குகுழி மீது கைக்குண்டு வீச்சு

(திருகோணமலை)

திருகோணமலை அனுராதபுரம் சந்தியிலுள்ள இராணுவ பதுங்குகுழி ஒன்றின் மீது கைக்குண்டுத் தாக்குதல் ஒன்று இடம் பெற்றுள்ளது.

நேற்று முன்தினம் 8.45 மணியளவில் இடம் பெற்ற இக் கைக்குண்டு வீச்சுத்தாக்குதலில் இரண்டு இராணுவ வீரர்கள் காயமடைந்துள்ளதாக இராணுவ பேச்சாளர் பிறிகேடியர் தயாரட்நாயக்க தெரிவித்துள்ளார்.

காயமடைந்தவர்கள் திருகோணமலை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்கள். இதேவேளை மட்டக்களப்பு மண்டூர்ப் பகுதியில் நேற்று முன்தினம் ஒருவர் கொலை செய்யப்பட்டுள்ளார்.

சைக்கிள் ஒன்றில் வந்த ஒருவர் இந்தக் கொலையை செய்துவிட்டு தப்பிச்சென்றுள்ளதாக கிழக்கு மாகாணத்திற்குப் பொறுப்பான பிரதிப்பொலிஸ்மா அதிபர் றொகான் அபயவர்த்தன தெரிவித்தார்.

உயிரிழந்தவரின் சடலம் கழுவாஞ்சிக்குடி வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. (து-9)

## குறை நிரப்புப் பிரேரணை பாராளுமன்றில் சமர்ப்பிப்பு

(கொழும்பு)

ஆழிப்பேரலையினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவவென நாடாளுமன்றத்தில் நேற்று குறைநிரப்புப் பிரேரணை சமர்ப்பிக்கப்பட்டது.

நிதியமைச்சரின் சார்பில் அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா இதனை சமர்ப்பித்தார். ஆழிப்பேரலையினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவுவதற்காக வரவுசெலவுத் திட்டத்தின் ஒதுக்கீடுகள் போதாமை காரணமாக இந்தப்பிரேரணை சமர்ப்பிக்கப்படுவதாக அமைச்சர் தெரிவித்தார்.

இதன் அடிப்படையில் 58ஆயிரத்து 621 மில்லியன் ரூபா தேவைப்படுவதாக தெரிவித்த அவர் அதில் 25ஆயிரத்து 513 மில்லியன் ரூபா வெளிநாட்டு நிதிகள் மற்றும் உதவிகள் மூலம் பெற்றுக் கொள்ளப்படவுள்ளதாக தெரிவித்தார்.

இதன்போது உரையாற்றிய ஐக்கியதேசியக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் பந்துல குணவர்த்தன வரவுசெலவுத்திட்டத்தின் நிதிகள் உரிய வகையில் பயன்படுத்தப்படாமையே இதற்கு முக்கிய காரணம் என்று தெரிவித்தார்.

கடந்த ஐக்கிய தேசியக்கட்சியின் ஆட்சிக் காலத்தில் ஒருமுறை மாத்திரமே குறைநிரப்பு பிரேரணை சமர்ப்பிக்கப்பட்டதாக அவர் மேலும் தெரிவித்தார். (து-9)

## அடையாள அட்டை விநியோகம்

தேர்தலில் வாக்களிக்க தேசிய அடையாள அட்டை அவசியம் இல்லையெனினும் இது வரை அடையாள அட்டையைப் பெறாதவர்களுக்கு அதனை வழங்குவதற்கு மக்கள் பாதுகாப்பு அமைச்சு நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

துரிதமாக தேசிய அடையாள அட்டை விநியோகிப்பதற்கு கொழும்பு 5 யாவத்தை வீதியில் அமைந்துள்ள சலுகல கட்டடத்தில் புதிய பிரிவு ஒன்று ஏற்படுத்தப்படவுள்ளது.

தேசிய அடையாள அட்டை பெறாதவர்கள் தமது பகுதி கிராம உத்தியோகத்தரிடம் இருந்து உரிய விண்ணப்பப் படிவத்தைப் பெற்று வர்ணப்புகைப்படத்தை ஒட்டி உரிய தரவுகளுடன் மீண்டும் கிராம உத்தியோகத்தரிடம் ஒப்படைக்க வேண்டும். (து-7)

## உதவி வழங்க கோரிக்கை

ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் சுவாமி கோவிலின் வருடாந்த மகோற்சவம் அடுத்தமாதம் 2ஆம் திகதி ஆரம்பமாகின்றது.

வரலாற்று சிறப்பு மிக்க வல்லிபுர ஆழ்வார் ஆலயத்தில் உள்ள அமுதசுரபி அன்னதான மடத்தில் வருடம் தோறும் ஞாயிற்றுக்கிழமைகளிலும், ஆலயவிசேட தினங்களிலும் மகோற்சவ காலங்களிலும் ஆலயத்திற்கு வரும் அடியார்களுக்கு 17 நாட்களும் அன்னதானப் பணியை சிறப்புற மேற்கொண்டு வருகிறது. ஆகவே இவ்வ ருடமும் இவ்வன்னதானப் பணியை சிறப்புற மேற்கொள்வதற்கு தங்களால் இயன்ற பொருள் நிதி உதவிகளை வழங்கும் படி அமுதசுரபி அன்னதான மட நிர்வாகத்தினர் கேட்டுள்ளார்கள்.

## சிறுவிளம்பரம்

### புதுசு கண்ணா புதுசு!

தமிழ் ஓசை மக்கள் இதழுடன் தமிழ் நாடு பழநி திருநீறு உட்பட இரண்டு இலவசப் பொருட்கள் இப்போது கிடைக்கின்றன! விலை ரூபா 20 மட்டுமே!! கிடைக்குமிடம் பூபாலசிங்கம் புத்தகசாலை, பஸ் நிலையம், யாழ்ப்பாணம். தமிழ் ஓசை-தமிழரின் ஓசை!. (9904)


### கட்டுரை, பேச்சுப்போட்டி

யாழ்.மாநகராட்சி மன்ற எல்லைக்குட்பட்ட பாடசாலை மாணவர்களுக்கான கட்டுரைப் போட்டி நாளை புதன்கிழமை மு.ப.10.00 மணிக்கு யா/இந்து மகளிர் கல்லூரி மண்டபத்திலும் பேச்சுப் போட்டி நாளை மறுதினம் வியாழக்கிழமை மு.ப.9.30 மணிக்கு நாவலர் கலாசார மண்டபத்திலும் இடம் பெறவுள்ளதாக யாழ்.மாநகர ஆணையாளர் சி.வி.கே சிவஞானம் தெரிவித்துள்ளார். (அ)

# விடுதலைக்குப் போராடும் அனைவராலும் நாளை 'பிரபாகரனிஸம்' படிக்கப்படும்!

## காவல்துறைப் பொறுப்பாளர் பா.நடேசன்

நாளைய வரலாறுகளில் விடுதலைக்காகப் போராடும் மக்கள் அனைவராலும் பிரபாகரனிஸம் பின்பற்றப்படும் என்று தமிழீழ காவல்துறைப் பொறுப்பாளர் பா.நடேசன் தெரிவித்துள்ளார்.

பிரான்சில் நடைபெற்ற விடுதலைப் பேரொலி நூல்வெளியீட்டு விழாவில் தமிழீழ காவல்துறைப் பொறுப்பாளர் பா.நடேசன் மற்றும் மாலதி படையணியின் சிறப்புத் தளபதி கேணல் விதுசா ஆகியோர் உரையாற்றினர்.

பா.நடேசன் தனது உரையில் குறிப்பிடுகையில்,

உயிரினும் மேலாக மதிக்கப்படும் எமது தலைவர் குறித்த வரலாறானது தமிழீழப் போராட்ட வரலாறாகவும் நீண்டு செல்லும் ஒன்று. உலகில் விடுதலைப் போராட்ட வரலாறுகளை நிகழ்த்திய பல தலைவர்களது வரலாறாகவும் அவர்களின் தேச வரலாறாகவும் விரிந்து செல்வதைப் போன்றதே.

தென்னாபிரிக்காவை கட்டி எழுப்பிய வரலாறு நெல்சன் மண்டேலாவின் வரலாறாகவும் நெல்சன் மண்டேலாவின் வரலாறு தென்னாபிரிக்காவின் வரலாறாகவும் விரிவதைப் போல எமது தேசியக் தலைவருடைய வரலாறும் அத்தகைய பண்புகளைக் கொண்டது.

ஒரு கைத்துப்பாகியுடன் ஆரம்பிக்கப்பட்ட போராட்டம் கெரில்லாப் போராட்டமாக வளர்ந்து மக்கள் போராட்டமாக மலர்ந்து இன்று தமிழீழத் தனி அரசை நிறுவும் கால கட்டத்தில்வந்து நிற்கிறது. விடுதலைப் போராட்ட காலத்திலேயே சமூக விடுதலைக்கான கட்டமைப்புக்களையும் முன்னெடுத்துச்சென்றார் எமது தலைவர்.

விடுதலைக்காகப் போராடும் மக்கள் அனைவராலும் பிரபாகரனிஸம் நாளை படிக்கப்படும்.

அவருடைய போர்நெறி விடுதலை, தீர்க்க தரிசனம்,ஆளுமை என்ற பல்வேறு விடயங்கள் ஆய்வுக்குள்ளாகும் என்றார்.

இதேவேளை சிறப்புத் தளபதி கேணல் விதுசா தனது உரையில்

விடுதலைப் போராட்ட காலத்தில் தலைவர் எங்களுடன் பகிர்ந்து கொண்ட கருத்துக்கள் சிலவற்றையே நான் பதிந்திருக்கிறேன். மக்களின் பங்களிப்பும் ஒத்துழைப்பும் இன்னும் அதிகமாக வேண்டும் சகல திறமையும் வாய்ந்த தலைவர் எமக்கு வாய்த்திருக்கிறார்.

விடுதலையை வென்றெடுக்க வேண்டும் என்ற சிந்தனை மக்கள் மத்தியில் சென்றடைய வேண்டும். ஏழ்மையில் வாழும் சிறார்களின் கல்வியினை வளர்க்க வேண்டும். உடல் ஆரோக்கியம் உள்ளவர்களாக அவர்களை வளர்க்க வேண்டும்.

இப்பணியை எல்லாம் சுமந்து செல்லக்கூடிய போராளிகள் வேண்டும் என அக்கறை கொண்டு நிற்கும் உயரிய தலைவர். அவர் குறித்த விடுதலைப் பேரொளி எனும் நூல் விடுதலைப் போராட்டத்திற்கு பயனுள்ள செயற்பாடு என அவர் தெரிவித்தார்.

இதேவேளை, மாணிநாகேசன் நூல் தனது அறிமுக உரையில்,

தமிழீழ தேசியத் தலைவர் குறித்தான தொடக்க நூலே விடுதலைப் பேரொளி தமிழ்ச் சூழலில் இதைப் போன்றதொரு நூல் இதுவரை வெளிவரவில்லை. அத்தோடு இது எமது தலை வருக்கு நாம் கொடுக்கும் ஒரு அன்பளிப்பே எனத் தெரிவித்தார். (04)

# ஐ.தே.கவின் தேர்தல் பிரசாரங்களை இரு கட்டங்களாக நடாத்த தீர்மானம்

(கொழும்பு)

ஐக்கிய தேசியக்கட்சியின் தேர்தல் விஞ்ஞாபனம் அடுத்த வாரம் வெளியிடப்படவுள்ளதுடன் கட்சியின் தேர்தல் பிரசாரத்தை இரண்டு கட்டங்களாக ஆரம்பிக்கப் போவதாகவும் அதன் பிரதிப் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார்.

வேட்பு மனுக்களைத் தாக்கல் செயற்வதற்கு முன்னர் பூர்வாங்க பிரசார நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

வேட்பு மனுக்கள் தாக்கல் செய்யப்பட்ட பின்னர் இரண்டாம் கட்ட பிரசாரப் பணிகள் ஆரம்பமாகும் என அவர் தெரிவித்தார்.

ஐக்கியதேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க பங்கேற்கும் கூட்டத் தொடர்கள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

ஒவ்வொரு தேர்தல் தொகுதியிலும் ஒவ்வொரு பிரதான கூட்டங்கள் நடைபெறும். அதனைத் தொடர்ந்து பல கூட்டங்கள் அடங்கிய விரிவான பிரசாரத்திட்டம் ஆரம்பமாகும்.

வீடு வீடாகச் சென்று மக்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்தும் முயற்சிகளையும் மேற்கொள்ளப் போவதாக திஸ்ஸ அத்தநாயக்க மேலும் தெரிவித்துள்ளார். (ற-7)

### விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன

இளஞ்சைவப்புலவர்-சைவப் புலவர் தேர்வுகள் அடுத்த ஆண்டு ஏப்ரல் இறுதிவாரம் நடைபெறவுள்ளது. இதற்கான விண்ணப்ப முடிவுதினம் எதிர்வரும் 30ஆம் திகதியாகும்.

பாட விதானம்/விண்ணப்படிவம் தேவையானோர் சங்கப் பணிமனையில் நேரிலோ அல்லது கடிதமூலமோ பெற்றுக்கொள்ளலாம் என அகில இலங்கைச் சைவப்புலவர் சங்கத்தின் தேர்வுச் செயலாளர் அறிவித்துள்ளார். (ற)

## இராசி பலன்

**21.09.2005**
**(புரட்டாதி 05, புதன்கிழமை)**
**சதுர்த்தி பின்னிரவு 2.49 மணிவரை**
**அச்சுவினி முற்பகல் 10.04 மணிவரை**
**இராகுகாலம் 12.05-1.32 மணிவரை**
**சுபநேரம் 4.32-6.02 மணிவரை**
**சங்கடகர சதுர்த்தி விரதம்**

| | |
|---|---|
| மேடம் | நல்ல முயற்சி, ஜனவசியம், தெய்வ சிந்தை, நண்பர்கள் சந்திப்பு. |
| இடபம் | பணவிரயம், உறவினர் வெறுப்பு, சயன சுகக்குறைவு, காரிய அலைச்சல். |
| மிதுனம் | எடுத்த காரியம் கைகூடும், மன மகிழ்ச்சி, போசன சுகம், நண்பர்கள் உதவி. |
| கடகம் | கடின முயற்சி, சுப செய்தி, உற்சாகம், உறவினர் வருகை. |
| சிங்கம் | இடமாற்றம், புதிய திட்டமிடல், சிந்தனை மிகுதி, உறவினர் சந்திப்பு. |
| கன்னி | காரிய தடங்கல், நண்பர்கள் விரோதம், உடல் வியாதி, வாகன பயம். |
| துலாம் | குடும்பநலன், நல்ல வரவேற்பு, தொழில் விருத்தி, தடைப்பட்ட காரியம் கைகூடும். |
| விருச்சிகம் | உடல்நலம், நிலைமாற்றம், உற்சாகம், காரிய சித்தி. |
| தனுசு | அமைதிக்குறைவு, வியாபார நன்மை, வேலையில் ஆர்வம், முயற்சி. |
| மகரம் | பெரியோர் வெறுப்பு, உடல்நலக்குறைவு, காரிய தாமதம், சுப செலவு. |
| கும்பம் | கூட்டுமுயற்சி, பொருள் சேர்க்கை, ஆரோக்கியம், நண்பர்கள் சந்திப்பு. |
| மீனம் | அதிக வார்த்தை, திடீர் நன்மை, தன விரயம், முயற்சி தாமதம். |

**பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது.**
**- வளவன்**

# பாடசாலை மதிப்பீட்டுத் திட்டங்களை மேலும் வலுப்படுத்த நடவடிக்கை

(கொழும்பு)

பாடசாலைகளை அடிப்படையாகக்கொண்ட மதிப்பீட்டுத் திட்டங்களை மேலும் வலுவூட்டப் போவதாக பரீட்சைத்திணைக்களம் தெிவித்துள்ளது.

மாணவர்களை மேம்படுத்துவதே இத்திட்டத்தின் நோக்கமாகும்.அவர்களை சர்வதேச மட்டத்திற்கு கொண்டுவரும் வகையில் பரீட்சைகளை வழங்கப் போவதாக பரீட்சை ஆணையாளர் அநுர எதிரிசிங்க தெரிவித்துள்ளார்.

மாணவர்களில் ஒளிந்திருக்கும் திறன்களை வெளிக்கொணர்வதற்கு எழுத்துமூலம் பரீட்சைகள் மாத்திரம் போதுமானவையல்ல என்பதைக் கல்வியமைச்சு கண்டறிந்துள்ளது.

பாடசாலைகளை அடிப்படையாகக் கொண்டு மதிப்பீடுகளின் மூலம் எல்லா மாணவர்களையும் ஒரு அங்கீகரிக்கப்பட்ட தொழிலுக்கு தயார்படுத்த எண்ணியிருப்பதாக அவர் மேலும் தெரிவித்துள்ளர்.(ற-4)

### முஸ்லிம்களின் நலன் குறித்து

# ஜனாதிபதி வேட்பாளர்களுடன் பேச்சு நடத்துகிறார் ஹக்கீம்

(கொழும்பு)

ஜனாதிபதி தேர்தலுக்கான வேட்பு மனுக்கள் தாக்கல் செய்யப்படுவதற்கு முன்னர் தமது கட்சியின் இறுதி நிலைப்பாட்டை அறிவிக்கவுள்ளதாக சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி வேட்பாளர்களாக பெயரிடப்பட்டுள்ள இருவருடன் பல தடவைகள் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

தனது கட்சி முன்வைத்துள்ள நிபந்தனைகள் தொடர்பாக இருவரிடமும் சாதகமான பதில்கள் கிடைத்துள்ளதாக ஹக்கீம் தெரிவித்துள்ளார். ஜனாதிபதி வேட்பாளர் இருவரிடமும் இதுவரை 3 தடவைகள் பேச்சுவார்த்தை நடத்தியதாக கூறிய அவர் தொடர்ந்தும் பேச்சுவார்த்தைகளை நடத்தவுள்ளதாக தெரிவித்தார்.

தற்போதைய சூழ்நிலையில் கண்டி மாவட்டத்திற்குள்ளும் வடக்கு-கிழக்கு தவிர்ந்த ஏனைய பிரதேசங்களுக்குள்ளும் முஸ்லிம்கள் சம்பந்தப்பட்ட பிரச்சினைகள் பலவற்றுக்கு தீர்வுகாணப்பட வேண்டியுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த விடயங்கள் தொடர்பாக இரண்டு வேட்பாளர்களுடனும் பேச்சுவார்த்தை நடத்தி உடன்படிக்கை ஒன்றின்மூலம் உறுதிகளைப் பெற்றுக்கொள்ளவிருப்பதாகவும் இதுவரை தங்களுடைய நியாயமான நிபந்தனைகளை இருவரும் ஏற்றுக்கொள்வதாக உறுதி வழங்கியதாகவும் ஹக்கீம் தெரிவித்தார்.

எனினும் சில கட்சிகளுடன் செய்து கொள்ளப்பட்ட உடன்படிக்கைகள் தொடர்பாகவும் கவனம் செலுத்த வேண்டியுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். (த-9)


## ஓம் கிரியா பாபாஜி நம ஓம்

**ஆன்மீக கிரியா யோகா சங்கம்**
**(கனடா நிலையத்தின் யாழ்.கிளை)**
**யோகாசன பயிற்சி வகுப்பும்**
**யோகா சிகிச்சை முறையும்**
**அங்குரார்ப்பண வைபவம்**

காலம்:- 21.09.2005 புதன்கிழமை
நேரம்:- பிற்பகல் 4.00 மணி
இடம்:- "வேளாவை" அளவெட்டி வடக்கு
ஸ்ரீசுப்பிரமுனிய ஆச்சிரமம்
அருகாமை அளவெட்டி.

தலைவர்:- செஞ்சொற் செல்வர் ஆறு.திருமுருகன் அவர்கள்
(உப.அதிபர் ஸ்கந்தவரோதயக் கல்லூரி)
இயக்குநர்:- திரு அப்பர்சுவாமி இராமநாதன் அவர்கள்

ஆர்வமுள்ள அனைவரும் பங்குபற்றி பயனடையுமாறு அழைக்கப்படுகின்றனர்.

(1701) இயக்குநர்


# அதிபர் சேவை தரம் 3 விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

இலங்கை அதிபர் சேவையின் III ஆம் வகுப்பிற்கு சேர்த்துக் கொள்வதற்காக நடாத்தப்படும் மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சைக்காக விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது.

விண்ணப்பதாரி பயிற்சி சான்றிதழ் செல்லுபடியாகும் தினம் முதல் 5 வருடங்களைவிட குறையாத திருப்திகரமான சேவைக் காலத்தை கொண்ட பயிற்சி பெற்ற ஆசிரியர்/ஆசிரியையாக இருத்தல் அல்லது கல்வி அமைச்சினால் வழங்கப்பட்ட ஆசிரியை பயிற்சிச் சான்றிதழ் மற்றும் அதற்குச் சமமானதாகக் கருதப்படும் ஆசிரியர்/ஆசிரியை சேர்த்துக்கொண்டு அச்சான்றிதழ் செல்லுபடியாகும் தினம் முதல் 5 வருடத்தை விடக் குறையாத திருப்திகரமான சேவைக் காலத்தை கொண்ட ஆசிரியர்/ஆசிரியையாக இருத்தல் வேண்டும்.

அத்துடன் பதவியில் நிரந்தரப் படுத்தப்பட்டிருப்பதோடு விண்ணப்பப்படிவம் கோரும் இறுதித் தினமன்று சேவையில் இருந்து இடைநிறுத்தப்பட்டுள்ள உத்தியோகத்தர் பரீட்சைக்குத் தோற்ற தகமையற்றவராவார்.

விண்ணப்பங்கள் யாவும் 2005.10.10 ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக் கூடியவாறு பதிவுத்தபால் மூலம் பரீட்சை ஆணையாளர் நாயகம், பரீட்சைத்திணைக்களம், பெலவத்தை, பத்திரமுல்ல என்ற முகவரிக்கு அனுப்பிவைக்கப்படல் வேண்டும். (அ-19)

# வீரப்பன் வாழ்வும் வதமும்

## மீள் பார்வை

என். சொக்கன் 28

2002ஆம் ஆண்டு வரை தங்களின் விசாரணையைத் தொடர்ந்த சதாசிவா கமிஷன் தேசிய மனித உரிமை கமிஷனிடம் தனது இறுதி அறிக்கையைச் சமர்ப்பிக்கும் என்று சொல்லப்பட்டது. ஆனால் இன்று வரை அந்த அறிக்கை வெளியானதாகத் தெரியவில்லை.

ஆகவே இரு மாநில அதிரடிப் படையினரின் மீது சுமத்தப்பட்ட இந்தக் குற்றச்சாட்டுகள் உண்மைதானா? ஆம் எனில் யாரெல்லாம் குற்றவாளிகள் என்ற விவரங்கள் இன்னும் வெளியாகாமலே மறைந்திருக்கின்றன இதற்கு யார் காரணம்? இந்தத் தகவல்கள் ஏன் வெளியாகவில்லை? இவை வெளியாவதை யாரேனும் விரும்பவில்லையா? இது தெரியவேண்டியது மிக முக்கியம்.

ஏனெனில் சதாசிவா கமிஷனிடம் சாட்சியளித்த மலைவாசி மக்களில் பலர் தம் மீது அதிரடிப் படையினர் நிகழ்த்திய வன்முறைகள் குறித்துத் தெரிவித்த விவரங்களில் சில பத்திரிகைகளிலும் வெளியாகின படிப்பறிவு இல்லாத அப்பாவி கிராமத்து மக்கள் மீது வன்முறை கட்டவிழ்த்து விடப்பட்டதும்? பாலியல் வன்முறைகள் நிகழ்த்தப்பட்டதும் பற்றி பக்கம் பக்கமாகப் பேசப்பட்டது போலீஸாரே இதனைச் செய்திருக்கிறார்கள் என்பது தமிழக மக்களிடையே மிகவும் கசப்புணர்வை உண்டாகியது சதா சிவா கமிஷனின் அறிக்கை இன்னும் வெளியாகவில்லை என்பது ஒரு புறம் இருக்க, அந்த கமிஷனே செயல்படாமல் இருப்பதும் கவனிக்கத்தக்கது. வீரப்பனின் மரணத்தோடு அந்த கமிஷனின் செயல்பாட்டுக்கும் நிரந்தரமாக முற்றுப் புள்ளி வைக்காமல் கமிஷனின் அறிக்கை கோரிப் பெறப்பட வேண்டியது. முக்கியம் குற்றம் குறித்து அறிக்கை சொல்லும் ஆதாரபூர்வமான விவரங்களின் அடிப் படையில் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியது மிகவும் முக்கியம் அரசின் மீதும் போலீஸார் மீதும் நீதி மன்றங்கள் மீதும் மக்கள் முற்றிலும் நம்பிக்கை இழப்பதை இது தான் தடுக்கும்.



வீரப்பனைச் சுட்டுக்கொன்று விட்டார்கள் என்பதால் அதிரடிப்படையினர் இதுவரை செய்தது எல்லாமே சரி தான் என்று ஆகிவிடாது என்பதை இரு மாநில அரசுகளும் நினைவில் கொள்வது மிகமிக அவசியம்.

வீரப்பனின் கொலைகளைப் போலவே அவன் செய்த ஆள் கடத்தல்களைப் பற்றிய விசாரணைகளும் பெரிய குழப்பமாகவே நீடிக்கின்றன. அது பற்றிப் பேசுவதற்கு நாம் ஒரே ஒரு உதாரணத்தை எடுத்துக்கொள்ளலாம்.

1994 ஆம் ஆண்டு இறுதியில் கோவை சிறுமுகைவனப்பகுதியில் இருந்து, மூன்று பேரை வீரப்பன் கடத்தி வந்தான் அவர்களை விடுவிக்கவேண்டுமானால் ஆயிரம் கோடி ரூபாய் தர வேண்டும் என்று கேட்டு அரசுக்குக் கடிதம் அனுப்பப்பட்டது. வீரப்பனின் அசாதாரணமான இந்த கோரிக்கைக்கு அரசாங்கம் சம்மதித்ததாகத் தெரியவில்லை ஆகவே இந்தக் கடத்தல் நாடகம் பல வாரங்களுக்கு நீடித்தது.

இந்தச் சூழ்நிலையில், டிசம்பர் 31 ஆம் தேதி வீரப்பன் கும்பலைத் தாக்கிய தமிழக அதிரடிப் படையினர் கடுமையான துப்பாக்கிச் சண்டைக்குப் பின் கடத்தப்பட்ட மூவரையும் பத்திரமக மீட்டு விட்டதாக ஒரு தகவல் வெளியானது. ஆனால் அடுத்த சில நாள்களுக்குள் வீரப்பனால் கடத்தப்பட்டு விடுதலையான டி.எஸ்.பி. சிதம்பரநாதன் அதிரடிப்படையினர் சொல்வதெல்லாம் பொய் என்று நக்கீரன் இதலுக்கு அளித்த பேட்டியில் கூறினார்.

வீரப்பனிடம் இருந்து தாங்களே தப்பி வந்ததாகவும் அதிரடிப்படையினர் அதை மறைத்து இதைத் தங்களின் சாதனையாகக் காட்டிக்கொள்கிறார்கள் என்றும் அவர் சொன்னார்.

இன்று வரை அந்த கடத்தல் விவகாரத்தில் உண்மையில் என்ன தான் நடந்தது என்கிற உண்மை உறுதி செய்யப்படவில்லை வீரப்பன் அவர்களை விடுவித்தானா அல்லது அவர்களாக தப்பிவந்தார்களா? அல்லது அதிரடிப்படையினர் சண்டை போட்டு அவர்களை மீட்டார்களா என்ற குழப்பம் இன்னும் நீடிக்கிறது.

இதேபோல் வேறு ஒரு கடத்தல் சம்பவத்தின் போது கர்நாடக அதிரடிப்படையினாரால் வீரப்பனிடம் இருந்து மீட்கப்பட்ட பணயக்கைதிகள் சிலர் அவனாகத்தான் எங்களை விடுதலை செய்தான் அதிரடிப்படைக்கும் இதற்கும் எந்த சம்பந்தமும் இல்லை! என்று பேட்டி அளித்து பரபரப்பூட்டினார்கள். இந்த சம்பவத்திலும் உண்மை நிலை என்ன என்பது தெளிவாகவில்லை.

இந்த குழப்பங்களுக்கு எல்லாம் சிகரம் வைப்பது போல் ராஜ்குமார் கடத்தல் சம்பவம் அமைந்தது. 2000ஆயிரம் ஆண்டு ஜூலை மாதம் வீரப்பன் கும்பலால் கடத்தப்பட்டு 108நாள்கள் காட்டில் இருந்தார். ராஜ்குமார் அவர் விடுவிக்கப்பட்டபின், இந்தக் கடத்தலைப்பற்றி ஏகப்பட்ட சர்ச்சைகள் கிளம்பின.

ராஜ்குமாரை மீட்கும் நடவடிக்கைகள் கிட்டத்தட்ட 3 மாத காலத்திற்குள் தொடர்ந்தன. "நக்கீரன்" ஆசிரியர் கோபல் தமிழர் தேசிய இயக்கத் தலைவர் பழ.நெடுமாறன், பெரியார் திராவிட இயக்கத் தலைவர் கொளத்தூர் மணி உட்படப் பலரும் அரசதூதுவர்களாக காட்டுக் குச் சென்று வீரப்பனை சந்தித்து திரும்பினார்கள். இப்படிப் பல சுற்றுக்களாக நீடித்த இந்தப் பேச்சு வார்த்தைகளில் அப்படி என்னதான் பேசப்பட்டது என்று மக்களுக்குத் தெளிவாகத் தெரிவிக்கப்படவே இல்லை. ஏதோ பிக்னிக் போய்வருவது போல், காட்டுக்குள் தூதுவர்கள் சென்று திரும்புகிறார்கள். ஒவ்வொரு முறையும், புதுப்புது புகைப்படங்கள், வீடியோப் படங்கள், ஆடியோ கேஸட்கள் வெளியாகின்றன. வீரப்பன், அவனுடைய கூட்டாளிகள், ராஜ்குமார், தூதுவர்கள் என்று எல்லோருமாகச் சுற்றி அமர்ந்து போட்டோவுக்கு போஸ் கொடுக்கிறார்கள். ஆனால், இப்படிப் படம் பிடித்த நேரம் போக, அவர்கள் என்ன பேசினார்கள்? வீரப்பன் எப்போது ராஜ்குமாரை வீடுவிப்பான்? அதற்குப் பதிலாக, அவன் என்னதான் எதிர்பார்க்கிறான்? இதெல் லாம் புரியாமல், மக்கள் குழம்பித் தவித்தது உண்மை.

அதேபோல், ராஜ்குமார் கடத்தல் சம்பவத்துக்குச் சற்று முன்னதாக, வீரப்பனுடன் புதிதாக இணைந்திருப்பதாகச் சொல்லப்பட்ட சிலர், வேறுவிதமான சர்ச்சைகளை உருவாக்கினார்கள்.

தமிழ்த் தேசியக் கொள்ளைகளில் நம்பிக்கை கொண்ட இந்தத் தீவிரவாத அமைப்புகள், வீரப்பனைப் பயன்படுத்திக் கொண்டு, தங்களின் தீவிரவாதச் சிந்தனைகளைச் செயல்படுத்துகின்றன என்று பேச்சு எழுந்தது. இவர்கள்தான் ராஜ்குமார் கடத்தலுக்குத் திட்டமிட்டுக் கொடுத்த சூத்திர தாரிகள் என்றும் வதந்திகள் உலவின அதற்கேற்ப ராஜ்குமாரை விடுவிப்பதற்காக வீரப்பன் விடுத்த நிபந்தனைகளில் பலவும், இந்த இயக்கங்களின் கொள்கைத் திட்டங்கள் போல் தான் அமைந்திருந்தன. ஆகவே, இந்தச் சந்தேகங்கள் வலுப்பட்டன.

பழ நெடுமாறன் போராசிரியர் கல்யாணி போன்றவர்களும், தமிழ்த்தேசியக் கொள்கைகளில் பற்றுடையவர்கள் தான் இவர்கள். தூதுவர்களாக வீரப்பன் இருந்த காட்டுக்குள் நுழைந்த போது இதில் வேறு உள்நோக்கங்கள் உண்டா என்கிற சந்தேகம் பரவலாக எழுந்தது. இந்த சிந்தனையின் அடிப்படையில், தமிழ் மாநில காங்கிரஸ் தலைவர் சோ. பாலகிருஸ்ணன் நெடுமாறனை தூதுவராக அனுப்பும் முடிவை கடுமையாக எதிர்த்தார். ஆனால் கார்நாடகத்தை சேர்ந்த பலரின் வற்புறுத்தலால் பழ நெடுமாறன் மீண்டும் காட்டுக்குள் சென்றார்.

(தொடரும்)

## ஊழியரை சுட்டுவிட்டு பணம் கொள்ளை

(கொழும்பு)

கம்பஹா பொலிஸ் நிலையத்திற்கருகில் எரிபொருள் நிரப்பு நிலைய ஊழியர் ஒருவர் நேற்றுமுன்தினம் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார்.

இந்த எரிபொருள் நிலையத்தில் கடந்த 17ஆம் திகதியும் நேற்று முன்தினமும் கிடைக்கப்பெற்ற வருமானத்தை எரிபொருள் நிலையத்திற்கு முன் புறம் இருக்கும் வங்கியில் வைப்பு செய்வதற்காக சம்பவத்தினம் காலை எரிபொருள நிலைய ஊழியர் எடுத்துச் சென்றுள்ளார் அவர் பாதையைக் கடக்கும் போது மோட்டார். சைக்கிளில் வந்த ஒருவர் அவர் மீது துப்பாக்கிச் சூடு நடத்தி விட்டு அவரிடமிருந்து 20 இலட்சம் ரூபா பணத்தையும் கொள்ளையிட்டுச் சென்றுள்ளனர்.

நேற்று முன்தினம் காலை 8.25 மணியளவில் இடம்பெற்ற இச்சம்பவத்தில் மீரிகமவைச் சேர்ந்த மகிந்த லக்ஷமன் என்பவரே உயிரிழந்தவராவர். (ற-4)

## தென்னையுடன் மோதிய லொறி

(சாவகச்சேரி)

தென்மராட்சியில் வேகக் கட்டுப்பாடிழந்த லொறி வீதியை விட்டு விலகி காணிக்குள் புகுந்தது.

18ஆம் திகதி மாலை 5.30 மணியளவில் இடம்பெற்ற இச் சம்பவத்தில் மந்துவிலில் இருந்து வரணி நோக்கிச் சென்று கொண்டிருந்த லொறியே இயற்றாலை பகுதியில் வசிக்கும் இராசநாயகம்பிள்ளை என்பவரிற்கு சொந்தமான காணிக்குள் நின்ற தென்னை மரத்தோடு மோதி பிறிதோர். தென்னை மீது சாய்ந்தது. வீதியின் குறுக்காக வீழ்ந்த தென்னையால் போக்கு வரத்து சில நிமிடங்கள் பாதிக்கப்பட்டது.

நால்வர் பயணித்த லொறி பலத்த சேதத்திற்கு உள்ளான போதும் பயணித்தோர் தெய்வாதீனமாக காயங்களேதுமின்றிதப்பினர். (த-21)

## வறிய குடும்பங்களுக்கு 5000 வீடுகள்

(கொழும்பு)

சமுர்த்தி வறுமை ஒழிப்பு அமைச்சு குறைந்த வருமானம் பெறுகின்ற குடும்பங்களுக்காக 5 ஆயிரம் வீடுகளை அமைத்துக் கொடுக்க முன் வந்துள்ளது.

ஒரு பிரதேச செயலகத்தில் 15 வீடுகள் என்ற அடிப்படையில் குடியிருப்புகள் நிர்மாணிக்கப்படவிருப்பதாக பதில் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

ஒவ்வொருவீடும் 2 இலட்சத்து 50 ஆயிரம் ரூபா பெறுமதி மிக்கதாக அமைக்கப்படும் சமுர்த்தி அதிகாரசபை 50 ஆயிரம் ரூபாவைப் பெற்றுக் கொடுக்கவுள்ளது. எஞசிய தொகை சமூக பங்களிப்பின் மூலம் திரட்டப்படவுள்ளது.

இந்தத்திட்டம் விரைவில் அம்பாந்தோட்டை மாவட்டத்தில் ஆரம்பிக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற-7)

## கண்டியில் இரட்டைக்கொலை குடும்பத் தகராறு காரணமாம்

(கொழும்பு)

கண்டி அஸ்கிரியவில் கடந்த சனிக்கிழமை இரட்டைக் கொலைச் சம்பவமொன்று இடம் பெற்றுள்ளது.

பெண் வைத்தியர் ஒருவரும் அவரது குழந்தையும் கத்தியால் குத்திக்கொலை செய்யப்பட்டுளளனர். குறிப்பிட்ட வைத்தியரின் கணவரே இக் கொலைகளைச் செய்ததாக கூறி பொலிஸார் அவரைக் கைது செய்துள்ளனர்.

அஸ்கிரியவில் உள்ள லேடி கோடன் வீதியிலுள்ள வீடென்றிலேயே இக் கொடூர இரட்டைக்கொலைச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. கொலைக்குப் பயன்படுத்திய கத்தி கடுகன்னாவை பள்ளத்தில் வெள்ளை நிற துணியொன்றில் சுற்றி வீசி எறியப்பட்ட நிலையில் கண்டி சிறப்பு நடவடிக்கை பொலிஸாரினால் மீட்கப்பட்டுள்ளது. பெண் வைத்தியரான வீ. சாந்தினி தந்தசிங்க (வயது -30) அவரின் குழந்தை சமுத்பத்திரன (6மாதம்) ஆகிய இருவருமே கொலைசெய்யப்பட்டவராவர்.

பெண் வைத்தியரின் உடலில் 29 இடங்களிலும், குழந்தையின் உடலில் 6 இடங்களிலும் கத்திக் குத்துக் காயங்கள் காணப்பட்டதாகவும், பெண் வீட்டாரின் பெற்றோர் அவரைப் பார்க்க வீட்டுக்கு வந்த வேளையிலேயே இவ்விருவரும் கொலை செய்யப்பட்டு கிடப்பதை கண்ணுற்று பொலிஸாருக்கு அறிவித்துள்ளனர்.

குடும்பத் தகராறே இக் கொலைகளுக்கு காரணம் என கண்டி பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ற)

## செல்போன் பாவனையாளர்கள் உலகில் 200 கோடி பேர்!

(சென்னை)

செலபோன் பயன்படுத்துபவர்கள் எண்ணிக்கை உலகில் 200 கோடியை எட்டியுள்ளது. செல்போன் பயன்டுத்தும் வழக்கம் உலகில் 20 ஆண்டுகளுக்கு முன்பு நடைமுறைக்கு வந்தது. விலை அதிகமாக இருந்ததால் முதலில இவை வசதி படைத்தவர்களே பயன்படுத்தினா்கள் விலை சற்று குறைந்த பிறகு 'செல்போன்' மீது ஏற்பட்ட மோகத்தால் அதை நிறைய பேர் பயனபடுத்த தொடங்கினார்கள்.





சமீபகாலமாக செல்போன் வைத்து இருப்பது ஒரு கௌரவம் போல ஆகிவிட்டது. இதன் அபரிதமான பயன்பாடு காரணமாக சாதாரண நிலையில் இருப்பவர்களிடம் கூட செல்போன் இருக்கிறது தற்போதைய நில வரப்படி உலகில் மூன்றில் ஒருவரிடம் செல்போன் உள்ளது.

2002ஆம் ஆண்டு நடந்த கணக்கெடுப்புப்படி உலகில் 100 கோடி பேரிடம் செல்போன் இருந்தது கடந்த ஞாயிற்றுக்கிழமை அது 200 கோடியை எட்டியது கடந்த மூன்றே ஆண்டுகளில 100 கோடி பேர் செல்போன் வாங்கி உள்ளனர்.

2010 ஆம் ஆண்டு உலகில் 300 கோடி பேரிடம் செல்போன் இருக்கும் என்று கணிக்கப்பட்டுள்ளது. சுவீடன்,இத்தாலி ஆஸ்திரியா, இங்கிலாந்தில் உளளவர்களிடம் 100 சதவீதம் செல்போன் இருக்கிறது.

ஆசிய கண்டத்தை சேர்ந்தவர்கள்தான் அதிக அளவில் செல்போனைப் பயன்படுத்துவதாக ஒரு கருத்துக்கணிப்பில் தெரிய வந்துள்ளது உலகில் தற்போது இந்தியா, சீனா ஆகிய 2 நாடுகளில் தான் செல்போன் விற்பனை மிக அதிக அளவில் உள்ளது. (ற)

# உயிர்காக்கும் உத்தமர்கள்



பல சந்தர்ப்பங்களில் பயன்கருதாது உதவி செய்பவர்கள், அத்திவார கற்களை போல் மற்றவர்களின் கண்களுக்கும், கருத்துக்களுக்கும் அகப்படுவதில்லை. அத்தகைய தனமையிலேயே குருதி கொடையாளர்களும் அடங்குவர். யார், எவர்க்கென்று இன்றி, மனித உயிர் எதற்கும் தமது இரத்தத்தால் உதவி செய்பவர்கள். உயிர் காப்பவர்கள் இவர்களே. பல நோயாளிகளுக்கு இவர்களே உண்மைக்கான "இரத்த உறவுகளாக" இருந்திருக்கின்றார்கள். இருந்து வருகின்றார்கள்.

பல்வேறு சந்தர்ப்பங்களில் நோயாளிகளுககு இரத்தம் அவசரமாகவும், அவசியமாகவும் தேவைப்படும். அத்தகைய சந்தர்ப்பங்களில் வைத்தியசாலைகளில் இயங்கும் இரத்த வங்கிகளின் பங்களிப்பு மிகவும்முக்கியமான, மூலாதாரமான இடத்தைப் பெறுகின்றது. அதேவேளையில இரத்த வங்கியின் செயற்பாட்டுக்கு குருதி கொடையாளர்களே தூண்களாக அமைகின்றனர்.

குருதி கொடையாளர்கள் இன்றி குருதி மாற்றீடு சாத்தியமில்லை என்பதை நாம் உணர்ந்து கொள்வதில்லை. வெளிநாட்டிலிருந்து இறக்குமதியாகும் இயந்திர சாதனங்களை வைத்தோ, கடைகளில் வாங்கும் பொருட்களை வைத்தோ இரத்த வங்கி இயங்கிவிட முடியாது. இரத்தமே அதன் இயக்கத்திற்கு தேவை. அதிலும் இரத்தத்தின தொடர்ச்சியான போதிய கையிருப்பு என்பது இரத்த வங்கியின் செயற்பாட்டுக்கு அத்திவாரம் ஆகும்.

இதனூடாக மனித உணர்வுடன் பொது நோக்காக தவணை முறைகளில் தொடர்ச்சியாக இரத்ததானம் செய்து வருபவர்களின் முக்கியத்துவத்தை நாம் உணர்ந்து கொள்ளமுடியும். இவர்களின் மனித உணர்வுடன் கூடிய அக்கறையான செயற்பாட்டை இரத்தவங்கியினரே அறிந்திருப்பார்கள். நோயாளர்களுக்கோ, நோயாளர்களின் உறவினர்களுக்கோ இதுவிடயமாக எதுவும் தெரியவருவதில்லை.

அந்த வகையிலேயே இரத்த வங்கி சமூகம் (தேசிய குருதி மாற்று சேவை) தன்னார்வ குருதி கொடையாளர்களை கௌரவிக்க முனைகின்றது. சமூகத்திற்கு இவர்களை அறியத்தருவது தமது கடமையென கருதுகின்றது. உண்மையில் குருதி கொடையாளர்களை கௌரவிப்பது சமூகத்தின் கடமையாகும். சமூகத்தின் பிரதிநிதியாக இரத்த வங்கி இவர்களுக்கு நன்றியறிதலை தெரிவிக்க முனைகிறது. இதை எமது கடமையாகக கருதுகின்றோம்.

இந்தச் சந்தர்ப்பத்தில் சில கருத்துக்களை முன்வைக்க முனைகின்றோம. உண்மையில் இரத்த வங்கிக்கு இரத்த தேவை என்பது ஒரு பிரச்சினையாக இருக்கத் தேவையில்லை. இரத்த வங்கியின் இரத்த தேவையை கவனிக்கும் பொழுது சமூகத்தின் மிகக் குறைவான விகிதத்தினர் இரத்ததானம செய்ய முன்வந்தாலே போதுமானது. நோயாளிகள் இரத்தமின்றி பரிதவிக்க வேண்டிய நிலைவராது. இத்ததானம செய்வது மிகவும் சுலபமான செயற்பாடாகும். மிகவும் குறுகிய நேரமே தேவைப்படும்.

இரத்ததானம் செய்வதால் எமது நாளாந்த வேலைகளில் எந்த மாற்றமும் தேவைப்படாது. சத்தான உணவு எடுக்க வேண்டும் என்றோ, சில நாட்களுக்கு ஓய்வு எடுக்கவேண்டும் என்றோ இல்லை. முன் அறிவித்தல் ஏதுவும் இன்றி இரத்த வங்கிக்கு கடமை நேரத்தில் வந்து இரத்ததானம் செய்யலாம். பலர் ஒன்றாக சேர்ந்து இரத்ததானம் செய்ய முன்வரும்போது நாம் அவர்களின் ஊர்களுக்கோ, வேலைத்தளங்களுக்கோ வந்து இரத்தத்தைப் பெற்றுக் கொள்வோம்.

ஆகவே மீண்டும் இத்தகைய உயரிய பணியை ஆற்றிவருபவர்களுக்கு எமது நன்றியைத் தெரிவித்துக்கொள்வதுடன், இந்த உன்னத பணியை ஆற்றுவதற்கு சமூக நோக்குக்கொண்ட அனைவரும் முன்வர வேண்டும் என்று அன்பான அழைப்பு விடுக்கின்றோம்.

**வைத்திய கலாநிதி. இ.சிவசங்கர்**
**தேசிய குருதி மாற்று பிரயோக சேவை**
**யாழ்.போதனா வைத்தியசாலை,**
**யாழ்ப்பாணம்.**

# வீடமைப்புத் திட்டங்கள் பலவும் பூர்த்தியடையும் தறுவாயில்!

(கொழும்பு)

தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை நடைமுறைப்படுத்தி வரும் பல வீடமைப்புத் திட்டங்கள் பூர்த்தியாக்கப்பட்டுள்ளன.

'தேசத்திற்கு நிழல்' என்ற பெயரில் ஆரம்பிக்கப்பட்டுள்ள நாட்டின் பல பாகங்களிலும் 72ஆயிரம் வீடுகளை நிர்மாணிக்கும் திட்டத்தின் செயற்பாடுகள் முடிவுக்குள் பூர்த்தியாகும் என அதிகார சபையின் தலைவர் பாரக்கிரம கருணாரட்ண தெரிவித்துள்ளார்.

இதற்கு 45 கோடி ரூபா நிதி செலவழிக்கப்படும். திறைசேரி துரிதமான நிதி ஒதுக்கீடுகளை மேற்கொண்டு வருவதால் கட்டுமானப் பணிகளில் முன்னேற்றம் தென்படுகின்றது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இந்த வீடமைப்புத் திட்டத்துடன் இணைந்ததாக அமுல் செய்யப்படும் நிலைத்திருக்கக்கூடிய கிராமங்கள் எனும் திட்டத்தின் கீழ் நாடு பூராகவும் 7ஆயிரத்து 700கும் மேற்பட்ட குடியிருப்புக்கள் அமைக்கப்பட இருக்கின்றன.

இது தவிர நிழல் தரும் சுரை என்ற திட்டத்தின் கீழ் வறிய குடும்பங்களுக்கு சுமார் 10 ஆயிரம் ரூபாவை பெற்றுக்கொடுக்கவும் நடவடிக்கை எடுக்கப்படுவதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ந-7)

# 2006 ற்கான இடமாற்றங்களுக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன

## முடிவுத் திகதி செப். 25

வடக்கு - கிழக்கு மாகாண அரச சேவையில் கடமையாற்றும் உத்தியோகத்தர்களுக்கு 2006ஆம் ஆண்டில் இடமாற்றங்களை வழங்குவதற்கான விண்ணப்பங்களை மாகாண பொது நிர்வாக அமைச்சு கோரியுள்ளது.

ஒரே சேவை நிலையத்தில் தொடர்ச்சியாக இரண்டு ஆண்டுகள் கடமையாற்றும் உத்தியோகத்தர்கள் வருடாந்த இடமாற்றங்களைப் பெற்றுக்கொள்வதற்காக விண்ணப்பிக்க முடியும் என்று மாகாண பொது நிர்வாக அமைச்சின் செயலாளர் தெரிவித்துள்ளார்.

இடமாற்றம் பெற விரும்பும் உத்தியோகத்தர்கள் தாம் விரும்பும் மூன்று சேவை நிலையங்களை முன்னுரிமை அடிப்படையில் குறிப்பிட்டு அனுப்புதல் வேண்டும்.

இடமாற்றங்களைப் பெற விரும்பும் உத்தியோகத்தர்கள் இம்மாதம் 25 ஆம் திகதிக்கு முன்னர் தமது விண்ணப்பங்களைத் தத்தமது திணைக்களத் தலைவர்களிடம் ஒப்படைக்குமாறு மாகாண பொது நிர்வாக அமைச்சின் செயலாளர் மேலும் தெரிவித்துள்ளார். (ந-7)

# மஹிந்தவுக்கு புதிய விதிமுறைகளை வழங்கவுள்ளார் ஜனாதிபதி சந்திரிகா

(கொழும்பு)

தனது கட்சி சார்பில் ஜனாதிபதி வேட்பாளராக போட்டியிடும் மஹிந்த ராஜபக்ஷ பின்பற்றவேண்டிய வரையறைகளை ஜனாதிபதி குமாரதுங்க தயாரிக்கவுள்ளதாகவும், அவரது கட்சி ஆலோசகர்களுடன் இதுபற்றி அவர் நீண்ட ஆலோசனை நடத்தியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இப் புதிய வழிகாட்டல் விதிகள் வழங்கப்படுவதுடன் கட்சியின் அமைப்பாளர்கள் மத்தியில் பாரிய பிளவுகள் ஏற்படலாம் என்று சுதந்திரக் கட்சியின் மூத்த உறுப்பினர்கள் அச்சமடைந்துள்ளனர்.

இப்புதிய வரையறைகளை அங்கீகரிப்பதற்கும், அண்மையில் ஏற்பட்டிருக்கும் மாற்றங்கள், போக்குகள் பற்றி ஆராய்வதற்கு மென ஜனாதிபதி தனது கட்சியின் மததிய குழுவையும் கூட்டவிருக்கின்றார். தனது கட்சியின் வேட்பாளர் கட்சியின் கொள்கைகள் கோட்பாடுகளையே பின்பற்றவேண்டும. கடும் போக்காளர்களின் அரசியல் போக்குகளை அனுசரித்தலாகாது என்பதில் ஜனாதிபதி இறுக்கமாக இருப்பதாகவும், இதனால் ஆளும்கட்சியின் பிரசார வேலைகள் மோசமாக பாதிக்கப்படலாம் என்றும் கட்சியின் அமைப்பாளர்கள் அச்சம் தெரிவித்துள்ளனர்.

ஜே.வி. பியுடன் உடன்படிக்கை செய்துகொண்டது பற்றி மஹிந்த ராஜபக்ஷவிடம் ஜனாதிபதி முன்னர் விளக்கம் கோரியிருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது. (த,4,6)

# இரண்டாம் காலாண்டில் பொருளாதாரம் வளர்ச்சி

இலங்கையின் பொருளாதாரம் இரண்டாவது காலாண்டுப் பகுதியில் வேகம கண்டதாக சர்வதேச நாணய நிதியம் தெரிவித்துள்ளது.

இவ் ஆண்டின் ஏப்ரல் முதல் ஜூன் வரையிலான காலப்பகுதியில் ஏற்பட்ட பொருளாதார் வளர்ச்சி கடந்த ஆண்டின இரு காலப்பகுதியில் நிலவிய பொருளாதார வளர்சசி வீதத்தைவிட 5 சத வீதம் அதிகமானது என மத்திய வங்கியின் அறிக்கையை ஆதாரம் காட்டி சர்வதேச நாணய நிதியம் தெரிவித்துள்ளது.

விவசாயத்துறை சார்ந்த அபிவிருத்தியே பொருளாதார வளர்ச்சிக்கு வித்திட்டுள்ளது. இதன் காரணமாக எஞ்சிய காலப்பகுதியில் பணவீக்கமும குறையக் கூடிய சாத்தியக் கூறுகள் காணப்படுகின்றன.

எனினும், உலக சந்தையில் மசகு எணணையின் விலை கூடியிருப்பதால் பொருளாதார மீட்சி மந்தமடைவதாக சர்வதேச நாணய நிதியம் மேலும் சுட்டிக்காட்டியுள்ளது. (ந-7)

# அணு ஆயுதங்களை கைவிட வடகொரியா அதிரடித் தீர்மானம்

(பீஜிங்)

தங்கள் நாட்டில் உள்ள அணு ஆயதங்களையும் தற்போது நடைமுறையில் உள் அணு ஆயுதங்களையும் கைவிட வடகொரியா அதிரடியாய் முடிவு செய்துள்ளது.

கொரியா தீபகற்பத்தில் அணு ஆயுதமற்ற அமைதியான சூழலை உருவாக்கவேண்டும் என்பதில் அமெரிக்கா விருப்பம் காட்டி வருகிறது.

ஆனால வடகொரியா அணு ஆயுதங்களை தயாரித்து அச்சுறுத்தலை ஏற்படுத்தி வந்தது.

வடகொரியா அணுஆயுதப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்காக அமெரிக்கா, வடகொரியா, சீனா, தென்கொரியா,ஜப்பான், ரஷ்யா ஆகிய 6 நாடுகள் சீனத் தலைநகர் பீஜிங்கில் கடந்த 6 நாட்களாக கூடி ஆலோசனை நடத்தின.

இந்த ஆலோசனைக்குப் பிறகு 6 நாடுகளின் சார்பில் கூட்டறிக்கை வெளியிடப்பட்டது. வடகொரியா மீது தாக்குதல் நடத்தமாட்டோம் என்றும் அந்நாட்டின் மீது படையெடுக்க மாட்டோம் என்றும் அமெரிக்கா உறுதி அளித்துள்ளது. இதனையடுத்து வடகொரியா தனது நாட்டிலுள்ள அணு ஆயுதங்களையும் தற்போது நடைமுறையில் உள்ள அணு ஆயுதங்களையும பங்கையும் கைவிட வடகொரியா முடிவு செய்துள்ளதாக அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.


அணு ஆயுதத் திட்டங்களைப் பார்வையிட சர்வதேச அணுசக்தி ஏஜென்சிக்கு அனுமதி அளிக்கவும வடகொரியா ஒப்புக்கொண்டுள்ளது. அணு ஆயுத பரவல் தடை ஒப்பந்தத்தில் இணைந்து கொள்ளவும் வடகொரியா ஒப்புக்கொண்டுள்ளது. இதன்மூலம் தென்கிழக்கு ஆசியாவில் அமைதி சூழ்நிலை உருவாகும் என எதிர்பார்க்கப்படுகிறது.

எதிர்வரும் நவம்பர் மாதம் மீண்டும் கூட்டம் நடத்த 6 நாடுகளும் முடிவு செய்துள்ளன. (ந)



கிழக்கு சீனாவின் ஜினான் நகரில் கடும் மழையால் சாலைகளில் வெள்ளம் ஓடுகிறது. வெள்ளத்தில் சிக்கிய கார்கள் பழுதாகி நின்றதால் பஸ்களை எதிர்பார்த்து காத்திருக்கின்றனர் அவற்றில் பயணம் செய்தவர்கள்.

WORLD NEWS உலக தரிசனம்



பிரபல இசை அமைப்பாளர் இளையராஜா மகள் பவதாரிணிக்கும் மதுரையைச் சேர்ந்த சபரி ராஜனுக்கும் திருமணம் நடைபெற்றது. இவர்களின் திருமண வரவேற்பு நிகழ்ச்சி நேற்றுமுன்தினம் சென்னை ஆர்.ஏ.புரத்தில் உள்ள ராமநாதன் செட்டியார் திருமண மண்டபத்தில் நடைபெற்றது. விழாவில் நடிகர் ரஜினிகாந்த், அவரது மனைவி லதாரஜினிகாந்த் ஆகியோர் மணமக்களுக்கு வாழ்த்துக்கள் வழங்கினர்.

# இராணுவ ஆயுத கொள்வனவில் ஈராக்கில் ரூ.4500 கோடி ஊழல்

ஈராக்கில் இராணுவத்துக்கு ஆயுதங்கள் வாங்கியதில் 4500 கோடி ரூபாய் ஊழல் நடந்துள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

சதாம் ஆட்சி வீழ்த்தப்பட்ட பிறகு உருவாக்கப்பட்ட புதிய ஈராக் இராணுவத்தினருக்கு புத்தாக்க பயிற்சி வழங்குவதற்காக ஒதுக்கப்பட்ட இந்த நிதி, போலந்து, பாகிஸ்தான் ஆகிய நாடுகளிலிருந்து ஆயுதங்கள் வாங்குவதற்காக முறைகேடாகப் பயன்படுத்தப்பட்டதாக பத்திரிகை தகவல்கள் தெரிவிக்கின்றன.


ஈராக்கில் நிகழ்ந்த மோசடிகளிலேயே இந்த ஊழல்தான்பெரியதாக இருக்கும் என்று ஈராக் நிதி அமைச்சர் அலி அலாவி தெரிவித்திருக்கிறார். இராணுவத்துக்காக வழங்கப்பட்ட நிதியில் பெருமளவு நிதி மாயமாகிவிட்டது. இந்த நிதியைப் பயன்படுத்தி வாங்கப்பட்ட ஆயுதங்களில் பெரும்பாலானவை துருபிடித்த இரும்பு சாமானகளாகததான் இருந்தன என்றும் அலி அலாவி ஒரு பேட்டியில் தெரிவித்திருக்கிறார். இராணுவத்துக்கு வாங்கப்பட்ட கவச வண்டிகள், ஏ.கே.47 ரக துப்பாக்கிகள் போன்றவை மிகவும தரம்தாழ்ந்தவை. அவை எதற்கும்உதவாக பழைய சரக்குகள், மொத்தத்தில் காட்சிப் பொருளாக வைக்கவேண்டிய தளபாடங்கள் என்று இந்த ஊழல் பற்றி செய்தி வெளியிட்டுள்ள பத்தரிகை தகவல் கூறுகிறது. அதில் மேலும் கூறியிருப்பதாவது,

ஈராக்கில் இராணுவ வீர்களுக்கு தரமான ஆயுதங்களும், பயிற்சிகளும் வழங்காததால் பெரும்பாலான வீர்கள் தவிரவாதிகளுக்கு எதிரான நடவடிக்கையின்போது உயிரிழந்துள்ளனர். இராணுவத்துக்கு ஆயுதங்கள் வாங்கியதில் முறையாக டெண்டர்கள், விதிமுறைகள் பின்பற்றப்படவில்லை.

இராணுவ ஆயுத பேர முறைகேடுகள்கடந்த ஆண்டு ஜுன் 28 முதல் இந்த ஆணடு பெப்ரவரி 28ஆம் திகதி வரையிலான காலத்தில் நிகழ்ந்துள்ளது. இந்த இராணுவ பேர ஒப்பந்தம் தொடர்பான கணக்கு தணிக்கை அறிக்கை பிரதமா அல் ஜபாரி அலுவலகத்தில் கடந்த மே மாதம் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. 4500 கோடி ரூபாய் அளவுக்கு நடந்துள்ள ஊழல் குறித்து மேற்கொண்டு நடத்தப்படும் விசாரணையில்தான் இதர விபரங்கள் தெரியவரும் என அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ந)

# இனவாதிகளின் கூட்டுக்குள்

உக்கிய கயிற்றை கொடுப்பதும் அதை விழுங்கி ஜீரணிப்பதும் அரசியல் நாடக அரங்கேற்றங்களில் வழமையாக நடைபெறும் ஒன்றாகும். விசேடமாக தேர்தல் காலங்களில் உக்கிய கயிற்றை கொடுப்பதும் அதை விழுங்குவதும் நாட்டின் நன்மைக்காக அல்ல. தமது நலன்களை பாதுகாப்பதற்காகவே இன்று இரு பிரதான கட்சி வேட்பாளர்களும் கயிறு



களை கிலோகணக்கில் விழுங்கிக் கொண்டி ருககிறார்கள். கொடுத்த இந்தக் கயிறுகளை எப்படி விழுங்குவது என்பதை நாங்கள ஆராய்ந்து பார்ப்போம்--- விழுங்கிய கயிறுகளை மீண்டும் வாந்தி எடுப்பது கடினமான விடயமாகும். விசேடமாக தேர்தல காலங்களில் கொடுக்கும் உக்கிய கயிறுகளைப் பற்றி வேட்பாளர்கள் மிகக் கவனமாக இருக்க வேண்டும். இன்று அரசியல் களத்தில் குதித்துள்ள பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவும், எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவும் அரசியல் நீரோட்டத்தின் வேகங்களுக்கு ஈடுகொடுத்து நீந்தும் வல்லமை உடையவாகள்.இந்த இருவரும் அடிக்கும் மேள தாளங்களுக்கு ஏற்ப அபிநயம் பிடித்து



ஆடக்கூடிய வல்லமை படைத்தவர்கள். ஆனால் ஜனாதிபதித் தேர்தலில் இருவரும வெல்வோம் என நம்பிக்கை உடையவர்கள். தங்களின் வாக்குகளை அதிகரித்து கொள்வதில் மிகக் கரிசனையுடன் செயற்படுவார்கள் ஆனால், தங்களிடத்தில் கொடுக்கும் இந்தக் கயிறுகளைப் பற்றி தேர்தல் காலங்களில் மிக அவதானமாக நடந்துகொள்ள வேண்டும்.இந்த இரண்டு ஜனாதிபதி வேட்பாளர்களில் மிக கவனமாக மஹிந்த ராஜபக்ஷ செயற்பட வேண்டும்.ஜனாதிபதித் தேர்தல் வெற்றியை விடக் கட்சிக்குள்இருக்கும் எதிர்ப்புக்களை முறியடிப்பது மிகக் கடினமான தொன்றாகும்.

நண்டகால அரசியல் வரலாறு அவரிடம் உண்டு. கட்சியில் மஹிந்த ராஜபக்ஷ செய்த சில் தியாகங்களினால் இன்று பண்டாரநாயக்க குடும்பத்தார் சார்பில் ஜனாதிபதி வேட்பாளர் என்ற உயர் பதவிக்கு வந்துள்ளார். பண்டாரநாயக்க குடும்பத்தை தோற்கடித்த பெரும் புகழ் இன்று மஹிந்த ராஜபக்ஷவை சாந்ததாகும்.

சிறிலங்கா சுதந்திர கட்சிக்குள் பல சிக்கல்கள் உள்ளன. கட்சிக்குள் பல உட்புசல்கள் உள்ளன. இன்றும் சுதந் திரக்கட்சி பண்டாரநாயக்க குடும்ப ஆதிக்கத்தின் கீழ்தான் உள்ளது. இதை முறியடிப்பது ராஜபக்ஷ யுகத்தை அவரால் இந்நாட்டில் ஏறபடுத்த முடியுமா என்பது சந்தேகமே. ஒரு கட்சியில் இரண்டாம் கட்டத்தில் இருந்து முதலாவது இடத்தை பெறவேண்டு மானால பல சவால்களை சந்திக்க வேண்டி வரும் சமீபகாலங்களில் நடந்தவைகளை நாம் உதாரணமாக எடுத்துக் கொண்டால் பிரேமதாசா இதில் முதலிடம் வகிக்கிறார்.

1988 ஆம் ஆண்டு ஆர்பிரேமதாசா ஜனாதிபதித் தேர்தலுக்கு வேட்புமனுத்தாக்கல் செய்தபின் அவருக்கு எதிராக சிறிமாவோ பண்டாரநாயக்க தேர்தல் களத்தில் இறங்கினார். அப்பொழுது தனக்கு மிக நெருக்கமானவர்களுடன் ஜனாதிபதித் தேர்தலில் இம்முறை தனக்கு வெற்றி நிச்சயம். ஏனெனில் ஜே.ஆர். ஜெயவர்த்தனவின் வாக்கும் எனக்குத்தான் கிடைக்கும் என்றார் சிறிமா. காரணம் ஐக்கிய தேசியக் கட்சி ஆதிக்கம் ஜே.ஆர். ஜெயவர்த்தன குடும்பத்தினரிடம் இருந்து பிரேமதாசாவின் கைக்கு மாறியது. இதை நேராக எதிர்க்க முடியாது ஜே.ஆர். ஜெயவர்த்தன மறைமுகமாக தனக்கு ஆதரவு தந்து ஆர்.பிரேமதாசாவின் வெற்றியை தடுத்து நிறுத்தி விடுவார் என்பதாலாகும். இதேபோல்


அவரின் நெருங்கிய சகாவான மஹிந்த ராஜபக்ஷவும் மேற்கூறிய சகல திட்டங்களுக்கு எதிராகவும் சந்திரிகாவுக்கு எதிராகவும் செயற்படத் தொடங்கியுள்ளார்.இவர்கள் கடும்போக்குடைய இனவாதிகளான ஜே.வி.பி ஜாதிக ஹெல உறுமயவுடன்கூட்டு ஒப்பந்தம் செய்து கொண்டபடியால் இவரை சிறிலங்கா சுதந்திரக்கட்சியும் ஏனைய கட்சிகளும் இவர் ஒரு இனவாதி என்று தற்பொழுது கூறி வருகின்றன. சமஷ்டி ஆட்சி முறையை இந்நாட்டில் கொண்டு வருவதற்கு சந்திரிகா குமாரதுங்கவும் மங்கள சமர வீரவும் முயற்சிகளை மேற்கொண்டனர். இதை



கௌரவமான அரசியல்வாதி உற்ற நண்பன என்றும் ஒருகாலத்தில் அவரை அமைச்சரவையின் ஊடகவியலாளர் என்ற பட்டத்தையும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியினர் சூட்டியிருந் தனர். இவருக்கு ஊடகங்களின் ஆதரவுகள் அதிகம் உண்டு இந்த ஊடகங்களின் பிரச்சாரத்தினால் இன்று மஹிந்த ராஜபக்ஷவுக்கு நல்ல தேர்தல் விளம்பரம் கிடைத்

# சிக்கித் தவிக்கும் மஹிந்த!

பண்டாரநாயக்க குடும்பத்தாரினதும் சந்திரிகாவின் வாக்குகள் தனக்கு கிடைக்கும் என்று ரணில் விக்கிரமசிங்க நினைக்கின்றாரோ தெரியவில்லை. ஆனால், மஹிந்த ராஜபக்ஷவின் ஆட்சியைவிட ரணில் விக்கிரம சிங்கவின் ஆட்சியின் கீழ் தனக்கு அதிக பாதுகாப்பு கிடைக் கும்



என்பதை சந்திரிக்கா மிக உறுதியாக நம்புகின்றார்.

ரணில் விக்கிரமசிங்கவின் சமீபத்திய இந்திய விஜயத்தின் பொழுது சந்திரிக்காவின் பதினொரு வருடகால ஆட்சியின் பொழுது சமாதான நடவடிக்கைகளை எப்படி முன்னெடுத்தார்? என்பதைப் பற்றி இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்கிடம் சந்திரிக்காவைப் பற்றி மிகவும் புகழ்ந்து கூறியுள்ளார். அதேபோல் கடந்த ஆறாம் திகதி சிறிலங்கா சுதந்திரக்கட்சி சம்மேளன கூட்டத்தில் ரணில் விக்கிரமசிங்கவின் சமாதான முன்னெடுப்பை பற்றி சந்திரிகா மிகவும் புகழ்ந்து கூறியுளளார்.

அவரின் சமாதான அரசியல் நகர்வினால நாடுபொருளா தாரத்தில் முன் னேறியதைப்பற்றி விபரமாக எடுத்துக் கூறியுள்ளார். சாதாரணமாக சந்திரி காவின் வாயால் ரணில் விக்கிரமசிங்கவைப் பற்றி புகழ் வாரானால் கருங்கல்லில் பட்டை உரித்தற்கு சமமாகும். எதிர்காலத்தில் ரணில் விக்கிரம்சிங்கவின் அனுசரணையைப் பெறுவதற்கே சிறிலங்கா



சுதந்திரக்கட்சிக் கூட்டத்தில் புகழாரம் சூட்டியுள்ளார். சமாதானத்தை ஏற்படுத்துவதற்கான முயற்சிகளை கடைசி ஆழிப்பேரலை கட்டமைப்பு வரைக்கும மேற் கொண்டார். ஆனால் அவருக்கு பாதகமான நிலை ஏற்பட்டது.

வெண்தாமரை அமைப்பு சர்வதேச இணக்கப்பாடு அதிகார பரவலாக்கல் கடைசியில் ஆழிப்பேரலை கூட்டமைப்புடன் சமாதான முன்னெடுப்பை சிறிலங்கா சுதந்திரக் கட்சியுடன் இணைத்துக் கொண்டு செயற்பட்டார். இவைகள் எல்லாம் இனப்பிரச்சனை தீர்வுக்கு வழி வகுக்கும் என்ற நம்பிக்கையின் பெயரில் செயற்பட்டார். புரிந்துணர்வு ஒப்பந்தம் போர் நிறுத்த ஒப்பந்தங்கள் இவைகள் யாவும் ரணிலின் ஆட்சியில் ஏற்படுத்தப் பட்டுள்ளன. இதை அமுல்படுத்தா வண்ணம் இவரை பல தீயசக்திகள் பின் நின்று வழி நடத்தின. அதனால் மற்றும் ஒரு சமா தான சந்தர்ப்பத்தையும் இழந்தார். இப்பொழுது

நாங்கள் மாற்ற முடிகிறது. ஆனால் இவைகளை எல்லாம் மறந்து தனது கட்சியினர் தனக்கு குழி பறிக்கின்றார்களோ என்று சந்திரிகா இப்பொழுது அவர்களைப் பற்றி பெரும் சீற்றம் கொண்டுள்ளார்.இந்த இனவாதிகளோடு இணைந்து அவர்களின் நிபந்தனைகளுக்கு கட்டுப்பட்டநாட்டில் எதிர்கால அரசியலை எப்படி நடத்தப் போகின்றார் என்பது எதிர்காலத்தில் மஹிந்த ராஜபக்ஷவுக்கு ஒருகேள்விக் குறியாகவே அமையப்போகிறது லங்கா சமசமா ஐக் கட்சி, இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி போன்ற பழம்பெரும் இடதுசாரிகளும் ஐக்கிய இலங்கைக்குள் அதிகாரப் பரவலாக்கலை ஏற்றுக் கொண்டு சிறிலங்கா சுதந் திரககட்சியில் அங்கம் வகிக் கின்றனர். வாசுதேவ நாணயக்காரவும் சமீபத்தில் இவற்றை ஏற்றுக் கொண்டுள்ளார். ஆனால் மஹிந்த ராஜபக்ஷ இவற்றுக்கு முழு எதிரியான ஜாதிக ஹெல உறுமய ஜே.வி. பி.யுடன் இணைந்து எப்படி



நாட்டில் ஆட்சியை நடத்தப் போகிறார்கள் என் பதைப் பற்றி நாங்கள் விரிவாக ஆராய வேண்டும் ஜாதிக ஹெல உறுமய, ஜே.வி.பி. ஆகிய இரண்டு கட்சிகளும தங்களை பாதுகாதது கொள் வ தற்காவே மஹிந்த ராஜ பக்ஷவுடன் கூடடுச் சேர்ந் துள்ளன என்று சிலர் கூறுகின் றனர்.

இவர்கள் நிபந்தனைகள் இல்லாமல் அல்லது நிபந்தனையுடன் மஹிந்த ராஜபக்ஷவை ஆதரிப்பது தங்களை பாதுகாத்துககொள்வதற்கே என்பது உண்மை. தங்கள அரசியல் வங்குரோத்தை வெளி உலகிற்கு காண்பிக்காமல் இந்த ஒப்பந்தத்தை மேற்கொண்டுள்ளார். ஆனபடியால் ஜே.வி. பி.யினதும் ஜாதிக ஹெல உறுமய கட்சி யினதும் இந்தக் கயிறை தற்பொழுது மஹிந்த ராஜபக்ஷ விழுங்கியுள்ளார்.இந்தக் கயிறு விழுங்கல் நாட்டுக்கு உகந்ததல்ல. இதனால் சிறுபான்மை தமிழ் முஸ்லிம்களின் ஆதரவுகள்இவருக்கு இத்தேர்தலில் கிடைக்கும் என்பதைப் பற்றி உறுதியாகக் கூறமுடியாது. ஜே.வி.பி, மஹிந்த ராஜபக்ஷ கூட்டு ஒப்பந்தத்தின் பின் பிரதமர் பேச்சுவார்த்தை மூலம்இனப் பிரச்சினை தீர்வினை காண்பேன் என்று அறிக்கை வெளியிட்டுள்ளார்.

இனப்பிரச்சினையின் சிக்கலை அவர் நன்குஉணர்ந்தவர்.பேச்சுவார்த்தைகள் மூலமாக இனப் பிரச்சினைக்குத் தீர்வு காணவேண்டும் என்பதை ஏற்கனவே கூறியுள்ளார். புலிகளின் தலைவர் பிரபாகரனுடன் நேரடியாகப் பேச்சுவார்த்தைகளை நடத்தப் போவதாகவும் பொதுக் கூட்டங்களில் பிரதமர்கூறிவருகின்றார். அதற்கான வழிமுறைகளை ஏன் இது எவ்வளவு தூரத்திற்கு சாத்தியப்படும் என்பதை விளக்கமாக அவர் கூறவில்லை? அவர்



துள்ளது.

ஆனால் ஊடகங்களின் பிரச்சாரங்கள் விளம்பரப் படங்களினால் மட்டும் ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெறமுடியா தென்பதை சகலரும் நன்கு அறிவார்கள். இன்று மக்கள் சுயபுத்தியுடன் இருக்கிறாா கள். ஆனபடியால் மின்கம்பங்கள் மதில்களில் விளம்பரங்கள் ஒட்டுவதில் எந்தப் பலனும் கிடையாது.

நாட்டுக்கு தெளிவான விளக்கத்தை மஹிந்த ராஜபக்ஷ தெரிவிக்க வேண்டும். ஆனால் இந்த இனவாதிகளின் கொள்கைகளை ஏற்று அவர்களின் நிபந்தனைக்கு அடிபணிந்துள்ள ராஜபக்ஷ எப்படி இந்த நாட்டுப் பிரச்சினையை தீர்க்கப் போகிறார்? தற்பொழுது இடியப்பச் சிக்கலில் மாட்டிக் கொண்டுள்ளார்.



சிறிலங்கா சுதந்திரக் கட் சியின் யாப் பிற்கு இணங்க அவர் நடந்து கொள்ள வேண்டும்.

ஆனால், ஜே.வி.பி., ஹெல உறுமய கட்சியும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியும் தாங்கள் ஆதரவளிக்கவில்லை என்றும் மஹிந்த ராஜபக்ஷ என்ற தனிநபர் ஒரு

**இணையப் பார்வை**

வருக்கே வாக்களிக்கப் போகின்றோம் எனக் கூறியுள்ளன.எது எப்படி இருந்தாலும் கட்சியின் கொள்கைக்கு இவர் கட்டுப்பட்டு நடக்கவேண்டும் அத்துடன் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியில் அங்கம் வகிக்கும் ஏனைய கட்சியினரைப் பற்றியும் சிந்திக்க வேண்டும் அவரின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் தனது கொள்கை பிரகடனத்தை வெளியிட வேண்டும். ஜே.வி.பி. பன்னிரண்டு நிபந்தனைகளையும் ஜாதிக ஹெல உறுமய எட்டு நிபந்தனைகளையும் விதித்துள்ளன. மஹிந்த ராஜபக்ஷவுக்கு விதித்துள்ள நிபந்தனைகள் ஒன்றுக்கொன்று வேறுபட்டதாகவுள்ளன.

இந்த வேறுபட்ட கருத்துக்களினால் இவரால் அரசியலை முன்னெடுத்துச் செல்ல முடியாது.


அப்படி இவர் ஜனாதிபதித் தேர்தலில் வென்றாலும் இந்த இனவாத கும்பலுடன் ஆட்சி நடத்துவது மிகக்கடினமாகும்.

**எழுத்துருவாக்கம்:- லங்காதீப பத்திரிகையின் கட்டுரையாளர் ரங்க களன்சூரிய**

# சமாதான வாழ்த்துச் செய்திகள்

## "வன்முறையற்ற வழிகளில் சமாதானத்தையும் நல்லிணக்கத்தையும் நோக்கி"

சர்வதேச சமாதான தினமாகிய இன்று சமாதானத்திற்கும் நல்லிணக்கத்திற்குமான நிறுவனம், சமாதானச் செய்திகளை ஐக்கிய நாடுகள் ஸ்தாபன செயலாளரிடமிருந்தும், மதத்தலைவர்களிடமிருந்தும் அரச, அரச சார்பற்ற நிறுவன அதிகாரிகளிடமிருந்தும் வழங்கி இந்நாளை சமாதான நாளாக அனுஷ்டிக்குமாறு அனைவரையும் அழைக்கின்றது.



**Dear Friends around the world,**

Peace is the paramount United Nations mission. It is the basis of our existence. The essence of our identity. The cause that animates everything we do.

September 21, the International Day of Peace, is a day on which we reaffirm our commitment to this quest.


It is an opportunity to consider how to strengthen our system of collective security. And it is meant to be a day of global cease-fire. I call on all countries and all people to stop all hostilities for the entire day. I also urge all people around the world to observe a minute of silence at 12 noon.

Twenty-four hours is not a long time. But it is time enough for combatants and political leaders to consider the destruction they are visiting on their people, and on their lands.

It is long enough to look over the barricades, and through the barbed wire, and to see if there is another path. On this International Day of Peace, let us all honour those who have suffered from violence. Let us hold in our hearts the ideal of peace.

Kofi Annan
UN Secretary-General

### அருள் ஆசிச் செய்தி



அன்புள்ளவர்கட்கு,

இன்று உலக சமாதான தினமாகும். உலகில் வாழும் அனைத்து மனித உயிர்களிற்கும் மிகவும் அவசியம் தேவையானது சமாதானம் ஆகும். இதனைக் குறிக்கோளாகக் கொண்டு சமாதானத்திற்கும் நல்லிணக்கத்திற்குமான நிறுவனம் இலங்கையில் வாழும் தமிழின மக்கள் துன்பத்திலிருந்து விடுபட்டு சமாதானத்துடன் வாழ்வதற்கு இந்நாளை சிறப்பிப்பது, ஏக்கத்துடன் வாழ்ந்து கொண்டிருக்கும் மக்களிற்கு இந் நிகழ்ச்சி மன ஆறுதலை தருவதாகும். சமாதானம் நிலைத்து வர அனைவரும் இறைவனைப் பிரார்த்திப்போமாக. சமாதானம்! சமாதானம்! சமாதானம! இதுவே இன்றைய கருப்பொருளாகவுள்ளது.

*'என்றும் வேண்டும் இன்ப அன்பு'*

ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள்
இரண்டாவது குருமகா சந்நிதானம்.



நாடு மறுபடியும் ஜனாதிபதித் தேர்தலை எதிர்நோக்குவதால் வழமை போல் தேர்தல் இனக்கூச்சலை உண்டாக்கும். சிறுபான்மையினரை பகைவர்களாக இனங்காணும்படி இந் நாட்டு மக்கள் பெரிதான மூளைச்சலவை செய்யப்பட்டுள்ளனா. அதனால் ஒரு தேர்தலிலிருந்து மறு தேர்தலிற்கு மோசமான முறையில் பாதிப்படைந்துள்ளோம். நாம் ஒரே நாட்டில் வாழ வேண்டுமெனில் வேறு வழியின்றி எமது வேறுபாடுகளை ஏற்றுக்கொண்டு ஒன்றாக வாழ்வதை விட வேறு மார்க்கமில்லை. அதுதான் சமாதானத்திற்கான பாதை. சந்தர்ப்பத்திற்குகந்த முறையல் செயற்பட்டு கூடி வாழ்வதை ஆதரிப்போம். அந்த முறையில் சமாதானத்திற்காகப் பாடுபடுவோம். சமாதானம் என்பது அமைப்பு ரீதியான சமயங்களுக்கு அப்பாற்பட்ட புனிதமான சொல். ஆனால் சகல பொய மதங்களும் சமாதானம் பற்றியே பேசுகின்றன. காருண்யமுள்ளவரான புத்த பெருமான் சமாதானம் பற்றியே பேசினார். தாருண்யமுள்ளவரான யேசுவும் சமாதானம் பற்றியே பேசினார். இந்துக்களும் ஆன்மிக ரீதியில் அப்படியே பேசுகின்றனர். வேறுபாடுகளுக்கு அப்பால சென்று சமாதானத்திற்காகச் செயற்பட எம்மால் முடியாதா? எமது பாடசாலை பாடவிதானங்களில் சமாதானக்கல்வி ஒன்றிணைக்கப்படவேண்டும். இதைச் செய்வதற்கு நாம் தாமதித்து விட்டோம். ஆனால் மிகவும் தாமதமாகவிட்டதாக நான் நினைக்கவில்லை. சமாதானமான தேர்தலுக்காக எதிர்பார்ப்புடன் செபிப்போம். நேர்மையான தேர்தல் நடைபெற்றால் மக்களின் தீர்ப்பினை ஏற்று தேர்தலுக்குப் பின்னரான சமாதான சூழலுக்காகவும் செபிப்போம்.

அருட்தந்தை S. M. செல்வரட்ணம் அமதி I
முதல்வர் – யாழ்.மாகாண அமல மரித்தியாகிகள்.




"வன்முறையற்ற வழிகளில் சமாதானத்தையும் நல்லிணக்கத்தையும் நோக்கி" என்ற தெளிந்ததொரு கருத்தொனியில் சமாதான வாரமொன்றைப் பிரகடனப்படுத்தி, யாழ்.குடாநாட்டில் சமாதான விழிப்புணர்வுகளையும், செயற்பாடுகளையும் செய்துவரும் சமாதானத்திற்கும் நல்லிணக்கத்திற்குமான நிறுவனத்திற்கு எனது பாராட்டும், ஆசீரும் உரித்தாகுக!

"சமாதானம்" என்பது அரசியலுடன் கலக்கப்பட்ட வியாபாரச சொல்லாக எம் அனைவராலும் ஜீரணிக்கப்படுகின்றது. தவிர, இலங்கை அரசியலிலும், உலக அரங்கிலும் பதவிக்கு ஏணியாக, பணத்திற்கான ஓர் சந்தையாக சமாதானம் என்ற சொல்லைப் பயன்படுத்துவது வருந்தத்தக்கது. சமாதானம் அரசியல் விடுதலையை மட்டும் குறித்து நிற்கும் ஓர் பதம் அல்ல. மாறாக தேசிய, இன, மத, மொழி, பண்பாட்டின் எல்லைகளைக் கடந்து, ஆன்மீக விடுதலையை குறித்து நிற்கும் ஓர் பதமாகும்.

மக்கள் இன்மொழி பேசி, இரக்கம் காட்டி, உயிர்களுக்கு மதிப்பளித்து, ஒன்றுபட்டு, வேற்றுமையில் ஒற்றுமையாய் வாழ்வது சமாதானத்தின் சிறப்பாகும். பண்பாட்டின் வேற்றுமைகளைக் கொண்டாடுவதை விடுத்து, அவற்றை முரண்பாட்டின் காரணங்களாக பாவித்தல் கூடாது. இன, மத, மொழி, தேசிய ஆர்வங்களால் பல உயிர்களைப் பறிகொடுத்து துன்பியல் வாழ்வை அனுபவிக்கும் நாம், சமாதானத்திற்காக ஒன்றுபடுவோம். குறிப்பாக வன்முறையற்ற வழிகளில் சமாதானத்தையும் நல்லிணக்கத்தையும் நோக்கி நகர்ந்து, சமாதானப் பண்பாடொன்றை எம் மத்தியில் உருவாக்குவோம். சமாதானப் பண்பாடென்பது நல்விழுமியங்களின், மனநிலைகளின், நடத்தை முறைகளின், வாழ்க்கை வழிகளின் தொகுப்பாகும். மட்டுமன்று, இப்பண்பாடு வன்முறையை விடுத்து முரண்பாட்டைத் தடுத்து, தனித் துவங்களை மதிக்கும் ஓர் பண்பாகும்.

இந்நாளில் சமாதானத்திற்காக ஒன்றிணைந்து உழைக்க அனைவரையும் அழைத்து, வாழ்த்தி ஆசிக்கின்றேன்.

மேதகு. தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை
யாழ்.மறைமாவட்ட ஆயர்.



"Every day many children, women and men around the world are dying because of wars. Lives of the people are precious and everyone should respect that by not taking it away from the people of this world. I pray that peace will conquer the world and the chance to live in peace and harmony will be given to each and every person".

Best regards
Agron Dragaj, UNHCR, Jaffna.



ஐக்கிய நாடுகள் ஸ்தாபனம் தனது பொது ஒன்றுகூடலின் தொடக்க நாளில் புரட்டாதி மாதம் 21ம் திகதியை சர்வதேச சமாதான தினமாகப் பிரகடனப்படுத்தியுள்ளமையை அறிந்து நான் சந்தோஷமடைகிறேன். இதை முன்னிட்டு சமாதானத்திற்கும் நல்லிணக்கத்திற்குமான நிறுவனம் புரட்டாதி மாதம் 15ம் திகதி தொடக்கம் 21ம் திகதி வரையிலான நாட்களை சமாதான வாரமாக அனுஷ்டிப்பதை அறிந்தது எனக்கு இரட்டிப்பு மகிழ்ச்சியை தருகின்றது. இச் சந்தர்ப்பத்தில் இந்த சமாதானச் செய்தியை தெரிவிப்பதில் நான் பெருமகிழ்வடைகின்றேன்.

சமாதானம் என்ற விடயம் ஒவ்வொரு மனிதனுக்கும், அவனுடைய இயல்பும், ஊக்கமும், மகிழ்ச்சியும் நிறைந்த வாழ்விற்கு மிகவும் இன்றியமையாத அம்சமாகவுள்ளது. ஆனால் அதேநேரத்தில் கடினமான பேச்சுவார்த்தை, உழைப்பு மூலமே சமாதானத்தை அடையலாம் என்பதையே நாம் அனுபவம் மூலமாகக் கற்றுக்கொண்டோம். இதனை அடைவதற்கு அனைவரினதும் பங்களிப்பு வேண்டும். போர் மற்றும் அசாதாரண நிலைமைகளால் இந்த உலகத்தில் பெருந்தொகையான உயிரழிவுகள் தொடர்ந்து கொண்டு இருக்கின்றன. ஏன் நாங்கள் இந்த அழகான பூமியில் சமாதானமாக வாழ்ந்து பெறுமதி வாய்ந்த உயிர்கள் அழிவதை தடுக்க முடியாது? சர்வதேச சமாதான தினத்தின் பிரகடனமானது இந்த உலகத்தின் சனத்தொகையில் ஒரு பகுதியினரின் இதயங்களுக்காவது சமாதானத்தின் தேவையை உணர்த்தும் என நான் நம்புகின்றேன்.

சமாதானத்திற்கும் நல்லிணக்கத்திற்குமான நிறுவனம் சமாதானத்தை நோக்கி முன்னெடுக்கும் அனைத்து செயற்பாடுகளும் வெற்றிகரமாக அமைய வாழ்த்துகின்றேன்.

பேராசிரியர் S.மோகனதாஸ்
துணைவேந்தர், யாழ் பல்கலைக்கழகம்

## மாபெரும் சமாதானக் கலை விழா

"வன்முறையற்ற வழிகளில் சமாதானத்தையும் நல்லிணக்கத்தையும் நோக்கி" இடம்:- யாழ் திருமறைக் கலாமன்றம், காலம்:- 21.09.2005, நேரம்:- மாலை 6.30

ஐக்கிய நாடுகள் ஸ்தாபனம் புரட்டாதி மாதம் 21ம் திகதியை சர்வதேச சமாதான தினமாகப் பிரகடனப்படுத்தியுள்ளது. இத்தினத்தை முதன்மைப்படுத்தி யாழ்ப்பாணத்தில் சமாதான நிறுவனமாக இயங்கி வரும் சமாதானத்திற்கும் நல்லிணக்கத்திற்குமான நிறுவனம் "இன்று மாபெரும் சமாதானக் கலை நிகழ்வு ஒன்றை திருமறைக் கலாமன்றத் தில் ஒழுங்கு செய்துள்ளது. பாடசாலைச் சிறார்களின் சமாதான நிகழ்வுகளும், "கலா பவனம்" தலைமையில் நடனங்களும், சிறப்பு நிகழ்வாகத் திருமறைக் கலாமன்றத்தின் "கொல்ஈனும் கொற்றம்" எனும் நாட்டுக்கூத்தும் நடைபெறவுள்ளது. அனைவரையும் வருக வருகவென வரவேற்கின்றோம்.

**போட்டியில் வெற்றியீட்டி பரிசு பெறுபவர்களின் விபரம்**

சமாதானத்திற்கும் நல்லிணக்கத்திற்குமான நிறுவனத்தால் சமாதான வாரத்தை யொட்டி நடாத்தப்பட்ட கவிதை, கட்டுரை, சுவரொட்டி போட்டி முடிவுகள் பின்வருமாறு

**கவிதைப் போட்டி முடிவுகள் :-** செல்வி. சோபிகா ஸ்ரீஜீவா (முதலாம் இடம்), செல்வி சு. சுகந்தினி (இரண்டாம் இடம்), செல்வன் ஆ. ஜென்சன் றொனால்ட் (கவிஞர் சூரிய நிலா) (மூன்றாம் இடம்)

**சித்திரப் போட்டி முடிவுகள் :-** செல்வி. கார்த்திகேயினி திருநாவுக்கரசு (முதலாம் இடம்), திருமதி. மாலாதேவி மதிவதனன் (இரண்டாம் இடம்), செல்வன் ப. கோகிலன் (மூன்றாம் இடம்)

**கட்டுரைப் போட்டி முடிவுகள :-** முதலாம் பிரிவு: செல்வி. மைதிலி மோகனராசன் (முதலாம் இடம்), செல்வன் அருள்ராஜா அங்கலின்றாஜ் (இரண்டாம் இடம்), செல்வன் திருநாவுக்கரசு துவாரகன் (மூன்றாம் இடம்), இரண்டாம் பிரிவு: செல்வி தனந்திகா சிற்றம்பலம் (முதலாம் இடம்), செல்வன் தர்மகுலசிங்கம் சுஜீவன் (இரண்டாம் இடம்), செல்வ முகூர்த்தனா பாலச்சந்திரன் (மூன்றாம் இடம்) மூன்றாம் பிரிவு: செல்வி யோசப்பின் ஷியார்னி லூக்காஸ் (முதலாம் இடம்), செல்வன் அன்ரனி எட்வின் றோஜர் (இரண்டாம் இடம்), செல்வி ஷிறோமி அந்தோனிராஜா (மூன்றாம் இடம்)

வெற்றி பெற்றவர்களிற்கான பரிசுகள் இன்று மாலை 6.30 மணிக்கு திருமறைக்கலாமன்றத்தில் நடைபெறவுள்ள சமாதான நிகழ்வில் வைத்து வழங்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம். மேலும் இப்போட்டிகளில் ஆர்வத்துடன் பங்குபற்றிய அனைத்துப் போட்டியாளர்களையும் பாராட்டுவதோடு மேற்படி சமாதானக் கலை நிகழ்வில் பங்குபற்றும்படி உங்களை அன்புடன் அழைத்து நிற்கின்றோம்.

T.P: 021-222 8131

சமாதானத்திற்கும் நல்லிணக்கத்திற்குமான நிறுவனம்
இல:08, குருசோ வீதி, சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.

# அன்புள்ள அம்மா

9

## பிரசவத்தின் போது என்ன நடக்கும்?

**பிரசவம் எப்பொழுது தொடங்கும்?**

பெரும்பாலான பிரசவங்கள் கணிக்கப்பட்ட திகதியிலிருந்து 2 கிழமை முன்னதாகவோ அல்லது 2 கிழமை பிந்தியோ நிகழும்.



திகதிக்கு 4 கிழமைக்கு முன்னதாக கிடைக்கும் குழந்தைகளிற்கு வளர்ச்சி போதாமலிருப்பதால் குறைமாத குழந்தைகளாக கருதப்பட்டு இவர்கள் விசேட பராமரிப்புக்கு உட்படுவர். (Premature Babies)

**பிரசவ திகதிக்கு முன்னரே வைத்திய சாலையில் நிற்கலாமா?**

சில தாய்மார் தாங்கள் வைத்தியசாலையிலிருந்து மிகவும் தொலைவிலிருப்பதால் திகதிக்கு முன்னரே வைத்தியசாலையில் வந்து நிற்க முடியுமா என்று கேள்வி எழும்புவார்கள். சிலர் தமது பிரசவம் திகதிக்கு முந்துமா அல்லது பிந்துமா என்று கேட்பார்கள்.

உண்மையில் உங்கள் குழந்தையின் பிறக்கும் தருணத்தை தீர்மானிப்பது நீங்களோ அல்லது வைத்தியரோ அல்ல. தீர்மானிப்பது உங்கள் வயிற்றில் உள்ள குழந்தையே. இயற்கையாக குழந்தைகள் தமக்குரிய வளர்ச்சி பெற்றதும் அதன் உடலிலிருந்து உண்டாகும் சில ஹோர்மோன்கள் பிரசவத்தை தூண்டுகிறது.

எனவே வைத்தியரால் சரியான திகதியை ஒருபோதும் கூற முடியாது. அதேபோல் முன்னரே வைத்தியசாலையில் நிற்பதும் சாத்தியமில்லை. ஏனெனில் பிறக்கும் நாளிற்கு மேலும் இரண்டு கிழமைகள்வரை காத்திருக்க வேண்டி நேரலாம்.

**பிரசவம்-சுகானுபவம்**

சற்று நேரம் வீட்டைவிட்டு வெளியே வந்து வீதியைப் பாருங்கள் எவ்வளவு மனிதர்கள்? உலகின் ஒவ்வொரு மனிதனும் பிரசவம் மூலம் பிறந்தவர்களே. நிமிடத்திற்கு 10பிரசவங்கள். எனவே இது உங்களுக்கு மட்டுமன்றி உலகில் ஒவ்வொரு பெண்ணுக்கும் நிகழும் ஒரு நிகழ்வென உங்கள் மனதைத்திடப்படுத்துங்கள். பிரசவத்தை நெருங்கும் போது பிரசவ நோவைத் தாங்கும் சக்தியும் உத்வேகமும் உங்கள் மனதில் இயற்கையாகவே உண்டாகும்.

**பிரசவ நோ கடுமையானதா?**

இந்தக் கேள்விக்கு ஒருவராலும் இல்லை என்று கூறமுடியாது. ஆனால் தாய்மார் பொறுமையாலும் கடுமையான தாங்கும் சக்தியாலும் இதை வெல்கின்றனர். பிரசவத்தின் போது கருப்பபைகள் இறுக்கமாக சுருங்கி. குழந்தையை கீழே தள்ள முற்படுவதாலேயே நோ ஏற்படுகிறது. முதற் பிரசவத்தின்போது தாய்மாருக்கு வேதனை அதிகமாக காணப்படும்.

பிரசவ நோவைக் குறைப்பதற்கு பின்வரும் வழிவகைகள் கையாளப்படும்.

1. ஊசிமருந்துகள் (PETHIDINE) பெதடின் எனப்படும் ஊசிமருந்து
2. நைதரசன் ஒட்சைட்டு -ஒட்சிசன் வாயுக் கலவையை முகருதல்
3. ஊசிமூலம் இடுப்புப்பகுதியை விறைக்கச் செய்தல் (Epidural) கீழ்க்கூறிய் 2முறைகள் எல்லா வைத்தியவாலைகளிலும் இருப்பதில்லை

**எனக்கு சுகப் பிரசவம் ஆகுமா?**

இது ஒவ்வொரு தாயின் மனத்திலும் எழும் பயமாகும். உலகில் 80வீதமான பிரசவங்கள் சுகப் பிரசவங்களே. மிகுதி 20வீதமானவை சத்திர சிகிச்சை மூலம் குழந்தை வெளியே எடுக்கப்படுகின்றது. பிரசவத்திற்கு முன்னரேயே இது சுகப்பிரசவமா இல்லையா எனக் கூறுவது மிகவும் கடினம். இது நீங்கள் பிரயாணம் செய்யும் வாகனம் பயணம் முடியும்வரை பிரச்சினை ஏதும தராதா? எனக் கேட்பது போன்றது. பிரயாண முடிவிலேயே உங்கள் பிரயாணம் சுகப்பிரயாணம என கூற முடியும். ஏனெனில் சுப்பிரசவத்திற்கென இருந்த தாய், இறுதி நேரத்திலும் குழந்தை வெளிவராத காரணத்தால் சத்திரசிகிச்சைக்குள்ளாவதும் உண்டு.

**யாருக்கு சத்திரசிகிச்சை (Caesarean) தேவை?**

1. பெரிய குழந்தை
2. சிறிய இடுப்பு (உயரம் குறைந்த தாய்மார்) 140cm இலும் குறைவு, செருப்பளவு 6இலும் குறைவு.
3. திரும்பாத குழந்தை அல்லது குறுக்காக இருக்கும் குழந்தை (Breech)
4. முந்திய பிரசவங்கள் சத்திர சிகிச்சை மூலம் 2 ற்கும் மேற்பட்ட சத்திர சிகிச்சைகள்)
5. உயர் குருதி அமுக்கம், சலரோகம் போன்ற நிலைமைகளில் சிலவேளைகளில் சத்திரசிகிச்சை தேவைப்படலாம்.
6. குழந்தையின் துடிப்புக்குறைதல். (கருஅவதி/Fetal Distress)
7. நஞ்சுக்கொடி (சூல்வித்தகம்) கருப்பையின் அடிப்பாகத்தில் இருத்தல் (Placenta praevia)
8. பிரசவ நேரத்தில் ஏற்படும் சிக்கல்கள்

**பிரசவ்நோ ஏன் ஏற்படுகிறது?**

பிரசவத்தின்போது கருப்பைச்சுவர் விட்டு விட்டு சுருங்க, கருப்பைக்கழுத்து விரிவடையத் தொடங்கும். இவ்வாறு கருப்பைச்சுவர் சுருங்கும்பொழுதே நோ ஏற்படுகிறது. கருப்பைச் சுவரின் சுருக்கத்தால் குழந்தை கீழ் நோக்கி மெதுவாக தள்ளப்படுகிறது.

**எவ்வளவு நேரம் எடுக்கும்?**

முதல் குழந்தைக்கு பிரசவ நேரம் 6-10 மணித்தியாலங்கள். இரண்டாவது குழந் தைக்கு 4-6 மணித்தியாலம் வரை செல்லும்.

**பிரசவத்தின் அறிகுறிகள் என்ன?**

1) கடுமையான வயிற்று நோ
   ஆரம்பத்தில் 5-10 நிமிடங்களிற்கு ஒருமுறை

பின் அடிககடி 2-3 நிமிடங்களிற்கு ஒருமுறை நோ தொடர்ந்து இருக்கும் நேரமும் படிப்படியாக கூடும் சிலருக்கு நாரி உளைவு மட்டுமே ஏற்படுகிறது.

2) பன்னீர்க்குடம் உடைதல் (Rupture of Amnion)

இது குழந்தையைச் சுற்றியுள்ள நீர்ப்பை உடைவதால் ஏற்படுகிறது. அதிகளவு நீர் கால்களினூடே வழிந்து ஓடும். இதன்போது வலி எதுமிருப்பதில்லை.

3) அதிகளவில் வெள்ளைபடுதல்

மேற்கண்ட குணங்குறிகள் இருந்தால உடனே வைத்தியசாலையை அணுகுங்கள்.

**பிரசவத்தின் போது உடலில் ஏற்படும் மாற் றங்கள்**

பிரசவ வேதனை தொடங்கியதும் கருப்பைச்சுவர்கள் சுருங்கி கருப்பைக் கழுத்து குழந்தை வெளியே வர போதுமான அளவிற்கு விரியும். அதாவது 1cm துவாரம் 10cm ஆக விரியும். பிரசவ மாற்றங்கள் பொதுவாக 3 கட்டங்களாக பிரிக்கப்படும்.

**1ஆம் கட்டம**

கருப்பைக் கழுத்து விரியத் தொடங்கி 10cm ஆக வரும் வரையான நேரம் 1ஆம் கட்டம் எனப்படும். கருப்பைக் கழுத்து கிட்டத்தட்ட மணித்தியாலயத்திற்கு 1-2cm வேகத்தில் விரிவடையும் ஆரம்பத்தில் விரியும் வேகம் மெதுவாகவும் பின்னர் வேகமாகவும் இருக்கும் இதன் போது குழந்தை மெல்லக் கீழிறங்கி வரும்.

**2 ஆம் கட்டம்**

இது கருப்பைக் கழுத்து முற்றாக விரிந்த நேரத்திலிருந்து குழந்தை வெளியே வரும் வரையிலான நேரம் 1முதல் 2 மணி நேரம்வரை எடுக்கும் இதன்போது தலை நன்றாக கீழிறங்கி நேர்குடலை அழுத்துவதால் முக்க வேண்டிய உணர்வு தென்படும்.

**3ஆம் கட்டம்**

குழந்தை பிறந்த நேரம் முதல் நஞ்சுக்கொடி (Placenta) வெளியேறும் நேரம் வரை இது குழந்தை கிடைத்து 10-15 நிமிடங்களிற்குள் நிகழும். சிறிதளவு குருதிப்போக்குடன் நஞ்சுக் கொடி வெளியேறும்.

**பிரசவ அறையில் நடப்பது என்ன?**

உங்களுக்கு பிரசவ வலி கடுமையாகவும் அடிக்கடியும் வரத் தொடங்க, நீங்கள் பிரசவ அறைக்கு வருமாறு அழைக்கப்படுவீர்கள்.

அங்கு உங்களை மருத்துவர் அல்லது தாதி உங்கள் வயிற்றையும் உங்கள் கருப்பைக்கழுத்தையும் பரிசோதிப்பார். கருப்பைக்கழுத்தை பரிசீலிக்கும்போது உங்களுக்கு அசௌகரியமாக இருப்பினும் வலி ஏதும் ஏற்படாது.

உங்கள் கருப்பைக்கழுத்து விரிந்து இருக்கக் காணப்படின் மருத்துவர் சிலவேளைகளில் பன்னீர்க்குடத்தை உடைத்து விடக்கூடும். இதன் போதும் வலி ஏதும் இருப்பதில்லை. பன்னீர்குடத்தை உடைப்பதன் நோக்கம் (ARM, Artificial Rupture of Membrane) பிரசவத்தை விரைவுபடுத்துவதாகும்.

உங்கள் கருப்பைக்கழுத்தின் விரிவு 5cm இலும் குறைவாக இருப்பின் உங்களை சற்று நேரம் கழித்து பிரசவ அறைக்கு வருமாறு வைத்தியர் சொல்லக்கூடும்.

கருப்பைக்கழுத்தின் விரியும் வேகம் போதுமானதாக இல்லாவிடின் கருப்பையின் சுருக்கத்தை தூண்டும் ஊசி மருந்து ஒன்று உங்களுக்கு செலுத்தப்படக்கூடும். இது உங்கள் பிரசவ வேகத்தை துரிதப்படுத்தும் (Syntocinon)

நீங்கள் பிரசவ அறையில் இருக்கும் போது குழந்தையின் துடிப்பு மற்றும் உங்கள் குருதி அமுக்கம் என்பன 15நிமிடங்களிற்கொரு முறை பரிசோதிக்கப்படும். 4 மணித்தியாலயத்திற்கொருமுறை கருப்பைக் கழுத்தின் விரிவு சோதிக்கப்படும். உங்களின் பிரசவ வலியைக் குறைப்பதற்கு ஊசி மருந்துகள் அல்லது முன்பு குறிப்பிடப்பட்ட நோயைக் குறைக்கும் வழிவகைகள் கையாளப்படும். நாரிப்பகுதியை அழுத்தி 'மசாஜ்' செய்வது நோவை சற்று தணிக்கும்.

பிரசவ அறையில நீங்கள் அனுமதிக்கப்பட்டபின் சாதாரணமாக வாய்மூலம் ஏதும் உட்கொள்ள அனுமதிக்கப்படுவதில்லை. இதன நோக்கம் யாதெனில் சில வேளைகளில் உங்களிற்கு சத்திர சிகிச்சை செய்ய நேரிடின மயக்க மருந்தால் எழும் சிக்கல்களை குறைப் பதற்காகும். பிரசவத்தின்போது பிரசவ அறையில்கூட இருப்

**வைத்திய கலாநிதி சி.நவநீதன்**

பதற்கு உறவினர் அல்லது கணவருக்கு அனுமதி வழங்கும் நடைமுறை வெளிநாடுகளிலும் வசதியுள்ள தனியார் வைத்தியசாலைகளிலும் உள்ளது. கணவன்கூட இருப்பதால் மன உறுதியும் வலியைத்தாங்கும் திறன் அதிகரிப்பதாகவும் ஆராய்ச்சிகள் தெரிவிக்கின்றன.

உங்கள் பிரசவம் சுமுகமாக முன்னேற்றம் அடைந்து தலை நன்கு கீழிறங்கியதும் உங்களுக்கு மலங்கழிக்க வேண்டும் போன்ற உணர்வு ஏற்படும். இவ்வேளையில் வைத்தியர் அல்லது தாதி, உங்கள் கருப்பைக் கழுத்தைச் சோதித்து அது முற்றாக விரிவடைந்து விட்டதா என பார்ப்பார்.

உங்களுக்கு முதற்பிரசவம் அல்லது குழந்தை பெரிதாயின் உங்கள் பெண் உறுப்பின் துவாரம் பெரிதாகுமாறு சிறியதொரு நீக்கல் ஒன்று உங்கள் பெண், உறுப்பில் ஏற்படுத்தப்படும் (Episiotomy). இதற்காக உங்கள் பெண் உறுப்பில விறைப்பு ஊசி ஒன்று போடப்பட்டு கத்தரிக் கோல் ஒன்றின் உதவியுடன் பெண் உறுப்பின் வாசல் அகலமாக்கப்படும்.

குழந்தை பிறக்கும்போது பெரும்பாலும் குழந்தையின் பிடரிப்பகுதியே முதலில் வெளி வரும். சில சமயங்களில் குழந்தையின் தலை வெளிவந்து உடல் வரமுன்னே கருப்பைச் சுருக்கம் நின்று விடும். இவ்வேளைகளில் நீங்கள் கடுமையாக முக்கி குழந்தையை வெளியேற்ற வேண்டும். (தொடரும்)

# மஹிந்தவின் உடன்படிக்கைகளால் பல்வேறு பிரச்சினைகள் ஏற்படும்

(கொழும்பு)

மக்கள் விடுதலை முன்னணியுடனும் ஜாதிகஹெல உறுமயவுடனும் பிரதமர் ஏற்படுத்திக் கொண்ட உடன்படிக்கைகள் மூலம் எதிர்காலத்தில் பல்வேறு பிரச்சினைகள் ஏற்படக்கூடிய சூழல் உள்ளதென றுகுனு மக்கள் கட்சியின் செயலாளர் அருண சொய்ஸா தெரிவித்துள்ளார்.

நாட்டில் அனைத்து இன மக்களை இணைத்துக்கொண்டு செயற்படக்கூடிய திறமை படைத்த ஒருவரையே தலைவராக மக்கள் தேர்ந்தெடுக்க வேண்டும் என்றும் கூறினார்.

கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டின்போது அவர் இதனைத் தெரிவித்தார்.

ரணில் விக்கிரமசிங்க ஆரம்பித்த சமாதான செய்பாடுகளை முன்னெடுத்துச் செல்வதில் பல்வேறு சவால்கள் நாட்டில் ஏற்பட்டுள்ளது. நாட்டில் நிலவுகின்ற நடைமுறை அரசியல் யாதார்த்தத்தின் படி செயற்பட முனைந்தால் மறுகணமே இந்த நாட்டில் யுத்த சூழ்நிலைதான் ஏற்படும்.

ரணில் விக்கிரமசிங்கவிடம் இந்த பிரச்சினைகள் குறித்து பல வருடங்களுக்கு முன்பு இருந்தே தெளிவான நிலைப்பாட்டுடன் கூடிய தெளிவான பாதையொன்று உள்ளது.

நிறைவேற்று ஜனாதிபதி தவிர்ந்த குறுகிய கால அதிகாரம் ஒன்று பாராளுமன்ற அரசாங்கத்தின் மூலம் அவருக்கு கிடைத்தது. அந்த குறைந்த பட்ச அதிகாரத்தைப் பயன் படுத்தி அந்த சந்தர்ப்பத்தில் சரியான தர்மானம் ஒன்றையும் அவர் எடுத்தார் என்று அவர் மேலும் தெரிவித்தார். (த-8)

# அதிகாரப் பகிர்வின் மூலமே சமாதானத்தை நிலைநாட்டலாம்

(கொழும்பு)

முரண்பாடுகளால் ஒருவரும் உயிரிழக்காத நிலைமையிலேயே யுத்த நிறுத்தம் அமுல்ப்படுத்தப்படுகின்றது என தேசிய சமாதான பேரவை தெரிவிக்கின்றது.

சமாதான நடவடிக்கைக்காக செய்து கொள்ளப்பட்ட யுத்தநிறுத்த ஒப்பந்தத்தின் பின்னால் பல்வேறு உயிர்ச் சேதங்கள் ஏற்பட்டிருப்பது துரதிஷ்டவசமானது என பேரவையின் நிர்வாகக் குழு உறுப்பினர் எஸ்.பால கிருஷ்ணன் தெரிவித்தார்.

இன்றைய தினம் அனுஷ்டிக்கப்படவுள்ள சர்வதேச சமாதான தினத்தை முற்குறித்து விளக்கமளிக்கும் வகையில் கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

2001ஆம் ஆண்டு யுத்த நிறுத்த ஒப்பந்தம் செய்து கொள்ளப்படுவதற்கு முன்னராக மாதாந்தம் 300ற்கும் மேற்பட்டோர் வன்முறையிகளில் உயிரிழந்துள்ளமை புள்ளிவிபரங் களிலிருந்து தெரியவந்துள்ளது அதற்குப்பின்னர் அந்தத் தொகையில் பாரிய வீழ்ச்சி ஏற்பட்டுள்ளமை சமாதானத்தின் தேவையை வெளிப்படுத்துவதாக குறிப்பிட்டார்.

இந்நிலையில் 4ஆவது தடவையாக சர்வதேச ரீதியில் சமாதானத் தினம் கொண்டாடப்படவுள்ளது.

இம்முறை ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடும் பிரதான அமைச்சர்களிடம் சமாதானத்தை நிலைநாட்டுவதற்கு உறுதுணை புரிய வேண்டும் என்னும் மடலை கையளிக்கவுள்ளதாக தேசிய சமாதானப் பேரவை தெரிவித்துள்ளது.

நாட்டில் சமாதானத்தை ஏற்படுத்த ஐக்கிய இலங்கையின் அதிகாரத்தைப் பகிர்வதே ஒரே தீர்வென தேசிய சமாதானப் பேரவை தெரிவித்துள்ளது. (த-9)

# தீவகத்தில் பொங்குதமிழ் ஏற்பாடுகள்

(யாழ்ப்பாணம்)

வேலணையில் பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், கிராம உத்தியோகத்தர்கள், சமுர்த்தி உத்தியோகத்தர்கள், சனசமூக நிலைய உறுப்பினர்கள் ஒன்று கூடி பொங்கு தமிழ் ஏற்பாடுகள் குறித்து கலந்துரையாடலொன்றை நடாத்தினர்.

வேலணையில் இடம்பெற்ற மற்றொரு நிகழ்வில் தீவகம் முழுவதுமுள்ள பாடசாலைகளின் அதிபர்கள் வலயக் கல்வி அதிகாரிகள் கூடி இது தொடர்பாக ஆராய்ந்துள்ளனர்.

வேலணை பிரதேச சபை உத்தியோகத்தர்களும் மற்றொரு கலந்துரையாடலை நடத்தியுள்ளனர். (ற)

## இன்று ஒரு தகவல்

# ஆப்ரஹாம்லிங்கன்

அமெரிக்க ஜனாதிபதி ஆப்ஹாம்லிங்கன் ஒரு நாள் தனது கோச் வண்டியில் தலை நகரான வோஷிங்டனுக்குச் சென்றுகொண்டிருந்தார். கோச் வண்டி ஒரு சாலையில் போய்க்கொண்டிருந்தது. அந்த சாலையின் ஒரு பக்கத்தில் ஒரு பயங்கரமான சதுப்பு நிலம் இருந்தது. அந்த சதுப்பு நிலத்தில் யாராவது மாட்டிக்கொண்டுடால் அவ்வளவு தான் ஆளை கொஞ்சம் கொஞ்சமாக உள்ளே இழுத்துவிடும். தப்பித்து வெயியே வருவது கஸ்டம் அப்படிப்பட்ட நிலம் அது.

ஆப்ரஹாம்லிங்கன் ஏதோ ஒரு முக்கியமான அரசாங்க வேலையாகப் போய்விட்டுத்திரும்பி வந்துகொண்டிருக்கிறார். அதனால் அந்த சமயத்தில் அவர் விலை உயர்ந்த ஆடைகளை அணிந்திருந்தார். அப்படி... அவர் அந்த கோச் வண்டியில் வந்து கொண்டிருந்தார். அந்த சமயத்தில் ஒரு காட்சி அவரது கண்ணில் பட்டது. என்ன தெரியுமா? தெருவுக்குப் பக்கத்திலிருந்த சதுப்பு நிலத்தில் ஒரு இளம் பன்றிக் குட்டி சிக்கிக்கொண்டு தவித்துக் கொண்டிருந்தது. பரிதாபமாகக் கத்தியது.

அதைப்பார்த்தார் லிங்கன் அவருக்கு என்னவோ மாதிரி ஆகிவிட்டது உடனே வண்டியை நிறுத்தச் சொல்லிக் கீழே இறங்கினார். தனது விலை உயர்ந்த ஆடைகளைப் பற்றி லட்சியம் செய்யாமல் தனக்கே ஆபத்து வரலாம் தான் ஒரு குடியரசுத் தலைவர் என்பதைப் பற்றியோசிக்காமல் அந்த சதுப்பு நிலப்பக்கம் போனார். அந்த சேற்றில் இறங்கி பன்றிக் குட்டியைக் காப்பாற்றி கரைசேர்த்தார். அதன் பிறகு நிம்மதியாககோச் வண்டியில் ஏறி வெள்ளை மாளிகைக்கு வந்து சேர்ந்தார். உடை,உடல் முழுவதும் சேறும் சகதியும்.

இப்படி இவரைப் பார்த்தவர்களுக்கெல்லாம் ஆச்சரியமாகிவிட்டது. அவர்களுக்கு ஒன்றும் புரியவில்லை இவர் நேராக உடைமாற்றிக் கொள்ளச் சென்றார். கோச் வண்டியைச் செலுத்திக் கொண்டுவந்தவனை எல்லோரும் சுற்றி வளைத்துக்கொண்டு என்ன ஆனது?" என்று விசாரித்தார்கள். ·அவன் வரும் வழியில் நடந்த விபரத்தைக் கூறினான் ஆப்ரஹாம்லிங்கனுடைய இரக்க குணத்தை எல்லோரும் பாராட்டினார்கள். புகழ்ந்தார்கள் ஆனால் இதற்கு லிங்கன் என்ன சொன்னார்·தெரியுமா?

"தயவு செய்து இந்த புகழ்ச்சியான பேச்சையெல்லாம் ஒதுக்கி விடுங்கள் அதெல்லாம் வேண்டாம் அந்தச் சிறு பிராணி சகதியில் மாட்டிக்கொண்டு துடித்துக் கொண்டிருந்தது. அதைப்பார்த்தேன உடனே என் இதயத்தில் ஒரு முள் குத்தியது. போன்ற உணர்வு அந்த முள்ளைப் பிடுங்கி எறிந்தேன். அவ்வளவுதான் உண்மையில் அந்தப் பிராணிக்கு நான் உதவினேன். என்பதை விட எனக்கு ஏற்பட்ட இன்னலைப் போக்கிக் கொண்டேன் என்பதுதான் உண்மை. அது தான் பொருத்தம்.. அப்படியிருக்கும் போது இதில் புகழ்வதற்கு என்ன இருக்கிறது? என்றாராம் எவ்வளவு உண்மையான வார்த்தைகள் பாருங்கள்!

இந்தக் காலத்திலும் பல பேர் அப்படி உள்ளனர் நீச்சல் தெரியாத ஒரு ஆள் தண்ணீரில் இறங்கிவிட்டான். தண்ணீர் ஆழம் அதிகம் என்பது இறங்கியபின்புதான் தெரிந்தது. தத்தளிக்க ஆரம்பித்துவிட்டான் வாள் வாள் என்று கத்துகிறான் கரையில் நின்று கொண்டிருந்த ஒருவர் இதைப் பார்த்துவிட்டார். அவருக்கு இதயத்தில் முள் வைத்தது போன்ற உணர்வு.

உடனே குபீரென்று தண்ணீரில் பாய்ந்தார்... அவரைக் காப்பாற்றிக் கரைக்குக்கொண்டு வந்து சேர்ந்தார். இதைப் பார்த்துக்கொண்டிருந்த இன்னொருவர்... காப்பாற்றிய அந்த ஆளைப் பாராட்டிப் புகழ்ந்தார். "என்னைப் புகழாதீர்கள் சார்" என்றார் அவர். "ஏன்?" என்று கேட்டார் இவர் "நான் அந்த ஆளை ஏன் காப்பாற்றினேன் தெரியுமா? அவன் நேற்றுத் தான் சார் என்னிடம் 300 ரூபா கடன் வாங்கியிருக்கிறான் இவன் தண்ணீரில் போய்விட்டான் என்றால் நான் கொடுத்த கடனும் தண்ணீரில் போய்விடுமே... அதனால் தான் காப்பாற்றினேன்" என்றான் அந்த ஆள்.

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

# விசேட கலந்துரையாடல்

(கற்கோவளம்)

எதிர்வரும் 30ஆம் திகதி நடைபெறவுள்ள பொங்கு தமிழ் எழுச்சி நிகழ்வு பற்றி பருத்தித்துறை வர்த்தகர்களுடனான விசேட கலந்துரையாடல் ஒன்று கடந்த சனிக்கிழமை மாலை 4.30 மணியளவில் சிவன் கோவில் பர்வதவர்த்தின் மண்டபத்தில் பருத்தித்துறை வர்த்தக சங்கத் தலைவர் குமார் தலைமையில் நடைபெற்றது.

இவ்விசேட கலந்துரையாடலில் யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களான கி.சிவநேசன், செ.கஜேந்திரன் ஆகியோர் கலந்து கொண்டு பொங்கு தமிழ் எழுச்சி நிகழ்வின் முன்னேற்பாடுகள் குறித்து சமகால அரசியல் நிலைவரங்கள் குறித்தும் கருத்துரைகள் வழங்கினர். (த-104)

# எழுச்சிப் பிரகடனம் செய்ய அலை அலையாகத் திரள்க!

## கஜேந்திரகுமார் பொன்னம்பலம் எம்.பி. அழைப்பு

(யாழ்ப்பாணம்)

தீர்க்கமான இறுதிக்கட்ட நிலையொன்றை எடுப்பதற்கு சிங்களப் பேரினவாதம் எம்மை நிர்ப்பந்தித்துள்ளது. அவர்களுடன் நாங்கள் செய்த ஒப்பந்தங்களோ பல. அவை கிழிந்த கடதாசித் துண்டுகளாகி விட்டன. இறுதியாக இயற்கைப் பேரவலத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான மனிதாபிமானப் பணிகளுக்கான பொதுக்கட்டமைப்பு கூட செல்லாக்காசாகி விட்டது இந்த அவலத்தையும் பேரினவாதம் செய்த அநியாயங்களையும் கவனத்தில் கொண்டு இறுதியான நிலையொன்றுக்கு நாம் தள்ளப்பட்டுள்ளோம் என்பதை எடுத்துக்காட்டி எழுச்சிப் பிரகடனம் செய்ய அனைவரையும் அலை அலையாக திரண்டு வருமாறு தமிழ்த்தேசியக் கூட்டமைப்புப் பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் அழைப்பு விடுத்துள்ளார்.

இது விடயம் தொடர்பில் அவர் விடுத்துள்ள அறிக்கையில்,

தமிழ் மக்களை அடக்கி ஒடுக்கி அவர்களின் அடிப்படை உரிமைகளை ஏறி மிதித்து தாயகத்தை சிதைக்கவும் அவர்களுக்குரிய தன்னாட்சி உரிமையை நிராகரிக்கவும் சிங்கள பெளத்த பேரினவாதம் தனது பேய்க் கூச்சலை தென்னிலங்கையில் மீண்டும் உரக்க ஒலிப்பது எமக்கு நன்றாகவே கேட்கின்றது.

ஐம்பது ஆண்டுகளுக்கு முன்னிருந்த நிலைக்கு தென்னிலங்கை அரசியல் சூழ்நிலை சென்றுள்ளது. இந்த சிங்கள பெளத்த பேரினவாதம் அவ்வப் போது எழும்பி ஆடிய ஆட்டங்களால் தமிழர் தாயகத்திலும் தமிழர்தம் நெஞ்சங்களிலும் அங்கொன்றும் இங்கொன்றுமாய் பல மாறாத காயங்கள் ஏற்பட்டன.

ஆனால் தற்போது எழுந்து ஆர்ப்பரிக்கும் சிங்கள பெளத்த பேரினவாதம் தமிழர் தாயகத்தைக் கூறுபோட்டு தமிழர்களின் இதயத்தையே பிளந்துவிடும் மூர்க்க நிலையை இறுதி வடிவமாக எடுத்துள்ளது.

இதன் மூலம், ஜனநாயக பாரம்பரியங்களை அடிப்படையாகக் கொண்ட வழிமுறைகளினூடாக தீர்வு ஒன்றை எட்டுவதற்கிருந்த சந்துபொந்துகளைக் கூட அடைத்துவிட்டு பேரினவாதம் எக்காளமிடுவதை தமிழ் மக்களாகிய நாம் உணர்ந்துகொள்ளவேண்டும்.

தோன்றியுள்ள பயங்கர நிலையால் எழும் எமது உணர்வலைகளை தமிழ் பேசும் மக்களாகிய நாம் சர்வதேச சமூகத்தின் முன் கொட்டி நியாயத்தைக் கேட்க வேண்டும் சிங்கள பேரினவாதத்தின் மூர்க்கத்தனத்தினால் இறுதி முடிவு எடுக்க வேண்டிய நிலைக்கு நாம் தள்ளப்பட்டுள்ளோம் என்பதை சர்வதேச சமுகத்தின் முன் எடுத்தியம்பவேண்டியது ஒவ்வொரு தமிழ் மகனினதும் கட்டாயக் கடமையாகும்.

எமது தாயகத்தில் எமது தலைவிதியை நாமே நிர்ணயித்துக் கொள்வதற்கு எமக்கு இயற்கையாகவே இருக்கும் உரிமையை உலகம் அங்கீகரிக்க வேண்டும் எமது தாயகப் பகுதியில் ஆக்கிரமித்து நிற்கும் பகுதிகளில் இருந்து அது வெளியேற வேண்டும் வரலாற்று ரீதியாக எமது தாயகம் கொண்டிருந்த இறையாண்மையை மீண்டும் பெறுவதற்கும் எமது சுதந்திர வாழ்வை உறுதிப்படுத்தவும் உலகத்தைக் கோருவதற்கான எழுச்சி எமது தாயகப் பிரதேசமெங்கும் பொங்கி எழுந்ததை மனதில் கொண்டு யாழ். மாவட்டத்தில் இம்மாதம் இறுதியில் நடைபெற உள்ள பொங்குதமிழ் நிகழ்வில் எல்லாத் தமிழ் மக்களும் கலந்துகொள்ள வேண்டும் என கூவி அழைக்கின்றேன் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. (ற)

# பொங்குதமிழ் ஏற்பாடுகள் பாரிய அளவில் முன்னெடுப்பு

(யாழ்ப்பாணம்)

வவுனியா தமிழ் எழுச்சி மாநாட்டுக்கு வலுச் சேர்க்கும் விதமாக இடம்பெறவிருக்கும் பொங்கு தமிழ் நிகழ்வில் பாடசாலை மற்றும் கல்வி நிலைய மட்டங்களில் எழுச்சி நிகழ்வுகளை முன்னெடுக்கும் நடவடிக்கைகள் முடுக்கி விடப்பட்டுள்ளன.

வன்முறையற்ற அமைதியான வழியில் தமிழினத்தின் அபிலாஷைகளை சர்வதே உலகிற்கு எடுத்துக்காட்டும் பாரிய பொறுப்பு பொங்கு தமிழ் நிகழ்விலேயே தங்கியுள்ளது.

இது தொடர்பான கலந்துரையாடல்கள் சுதுமலை முன்பள்ளி மானிப்பாய் விக்ஸ்மன் கல்வி நிறுவனம், மானிப்பாய் வளர்மதி முன்பள்ளி,காரைநகர் ஐடியில் அக்கடமி என்பவற்றிலும் இளவாலை சென்கென் றீஸ் விளையாட்டுக்கழகம்,வலிகாமம் தென்மேற்கு பனை தென்னை வள கூட்டுறவுச்சங்க நிர்வாகிகள் ஆகியோரிடையேயும் கடந்த சனிக்கிழமை இடம் பெற்றன.

சகல கலந்துரையாடல்களிலும் கலந்து கொண்ட அங்கத்தவர்கள் பெங்குதமிழை சிறப்பாக எழுச்சியுடன் நடாத்துவது தொடர்பாக உறுதியுடன் காணப்பட்டனர் இதைவிட பொங்கு தமிழ் நிகழ்வில் மக்களை அணி திரளக்கோரி யாழ் மாவட்டம் முழுவதும் ஒலி பெருக்கிகள் மூலம் பிரசாரங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. (ற)

# சம்பள முற்பணத்திற்கென 10 கோடி ரூபா ஒதுக்கீடு

(கொழும்பு)

வடக்கு-கிழக்கில் சுனாமியால் பாதிக்கப்பட்ட அரச ஊழியர்களுக்கு வட்டியில்லா சம்பள முற்பணக் கொடுப்பனவுகளை வழங்குவதற்காக திறைசேரி 10 கோடி ரூபாவை ஒதுக்கியுள்ளதாக மாகாண நிதியமைச்சின் செயலாளர் எஸ். மகாலிங்கம் தெரிவித்துள்ளார்.

சுனாமி இயற்கை அனர்த்தத்தில் 3 ஆயிரத்து 250 ஊழியர்கள் பாதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. அன்னவருக்கும் சம்பள முற்பணத்தை வழங்குவதற்கு 400 கோடிரூபா தேவை. முதற்கட்டமாக 10 கோடி ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது என மகாலிங்கம் மேலும் தெரிவித்துள்ளார். (ற-7)

# திருமலையின் இயல்பு நிலையை இல்லாதொழித்தது இராணுவம்

## சர்வதேச சமூகத்திற்கு உண்மை நிலையை விளக்குமாறு தமிழ் மக்கள் பேரவை வேண்டுகோள்

(திகோணமலை)

திருகோணமலையில் யுத்த நிறுத்தத்தை இராணுவமும் அரசும் ஒழித்துவிட்டது என்பதை சர்வதே சமூகத்துக்குத் தெரியப்படுத்துமாறு போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவினருக்கு தமிழ்மக்கள் பேரவை வேண்டுகோள் விடுத்துள்ளது.

கண்காணிப்புக்குழுவுக்கு தமிழ் மக்கள் பேரவை தலைவர் விக்னேஸ்வரன் நேற்று அனுப்பியுள்ள கடிதத்திலேயே இதனை வலியுறுத்தியுள்ளார்.

புத்தர் சிலையை சட்டவிரோதமாக அமைத்ததன் பின்னர் திருகோணமலை நகரில் ஏற்பட்டுள்ள அசாதாரண அச்ச, குழப்ப நிலை பற்றி கண்காணிப்புக்குழுவுடன் எத்தனையோ முறை பேசப்பட்டுள்ளது.

அரசும், அரச படைகளும் திருகோமலை நகரில் மிகச் சொற்ப அளவில் வசிக்கும் பெரும்பான்மையின சிங்கள மக்களை சமாதானப்படுத்தும் வகையில் செயற்பட்டுக்கொண்டிருக்கின்றனர்.

அரசும்,அரச படைகளும் திட்டமிட்டுச் செய்யும் உளவியல் யுத்தத்தின் காரணமாக பெரும்பான்மையாக வாழும் தமிழ் பேசும் மக்கள் தமது அன்றாட வாழ்க்கையினை தொலைத்து விட்டு ஒவ்வொரு கணப்பொழுதையும் சொல்லொணாத்துயரத்துடன் அனுபவித்துக் கொண்டிருக்கின்றனர்.

கண்காணிப்புக்குழுவிற்கு எத்தனையோ முறையீடுகள் சமர்ப்பித்தும் சோதனைச் சாவடிகள் குறைவதாக இல்லை. நாளாந்தம் புதிய புதிய சோதனைச் சாவடிகளும் சோதனை நடவடிக்கைகளும் அதிகரித்த வண்ணமே உள்ளன.தமிழ் பேசும் மக்கள் கூடுதலாக பிரயாணம் செய்யும் உப்புவெளி, புல்மோட்டை பாதையில் அவர்களை வேண்டுமென்றே துன்புறுத்தும் நோக்கில் கடுமையான சோதனைகள் நடத்தப் படுகின்றது.

பெரும்பான்மையின மக்கள் பயணிக்கும் சாலைகளில் இந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வில்லை என்பதை வேதனையுடன் சுட்டிக்காட்ட விரும்புகின்றோம்.

திட்டமிட்ட அடிப்படையில் இரவு நேரங்களில் பாதுகாப்பு படைத்தரப்பினாலேயே குண்டுகள் வீசப்படுகின்றன. ஏனெனில் குண்டுகள் வீசப்படும் இடங்களில் அடுத்த நாட்காலையில் காவலரண்கள் அமைக்கப்படுகின்றன. இதற்குரிய முன்னேற்பாட்டு நடவடிக்கையே இந்தத் தாககுதல்கள்.

தற்போதுள்ள சூழ்நிலையில் 2002ஆம் ஆண்டுக்கு முன்னைய யுத்த காலத்தைவிட மிகவும் மோசமானதொரு நிலை தோற்றுவிக்கப்பட்டுள்ளது.

மிகவும் மோசமான யுத்தம் நடைபெற்ற காலப்பகுதிகளில் கூட திருகோணமலை நகரில்இவ்வாறான இராணுவக் குவிப்பும் ஆக்கிரமிப்பு நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை. திருகோணமலை மாவட்டத்தைப் பொறுத்தவரை யுத்த நிறுத்த கண்காணிப்புக்குழு உயிர்ப்புடன் செயற்படுவதாக காட்டிக் கொள்வதில் எவ்வித பயனுமில்லை.

எனவே திருகோணமலை நகரில் சட்டவிரோதமாக அமைக்கப்பட்ட புத்தர் சிலையையும் அத்துமீறி புகுத்தப்பட்டுள்ள ஆக்கிரமிப்பு இராணுவத்தையும் உடனடியாக அகற்றுவதற்குரிய நடவடிக்கையை யுத்த நிறுத்த ஒப்பந்தத்தின்படி உடனடியாக மேற்கொள்ள வேண்டும்.

தற்போது திருகோணமலை நகரில் பூரணமாக யுத்த நிறுதத ஒப்பந்தம் அரசாலும் இராணுவத்தாலும் இல்லாதொழிக்கப்பட்டுள்ளதாக சர்வதேசத்திற்கு தெரியப்படுத்தப்பட வேண்டும் என்று அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த-4)

# தமிழ்த் தேசியத்தின் குரல் ஓங்கி ஒலிக்கட்டும்

## பொங்குதமிழில் அணிதிரளுமாறு தேசிய எழுச்சிப் பேரவை அறைகூவல்

தமிழரின் இறைமையையும, சுதந்திரப் போரையும் சர்வதேச சமூகம் அங்கீகரிக்கக்கோரி வவுனியா தமிழ்த்தேசி எழுச்சி மாநாட்டில் எடுக்கப்பட்ட தீர்மானத்திற்கு வலுவும், உரமும் ஊட்டும் வகையில் யாழ்ப்பாண குடாநாடு தழுவியதாக நடைபெறவிருக்கின்ற தமிழர் உரிமை பிரகடனத்தில் அனைத்து தமிழ்பேசும் மக்களும் கலந்துகொண்டு எமது உண்மையான, உறுதியான உணர்வுகளை எழுச்சியுடன் ஓங்கி ஒலிப்போம் வாரீர்! என யாழ்ப்பாண மாவட்ட தேசிய எழுச்சிப் பேரவை அறைகூவல் விடுத்துள்ளது.

இது தொடர்பில் பேரவை விடுத்துள்ள அறிக்கையில்,

தமிழ்த் தேசியத்தின் விடிவுக்கான பாதையில் நாம் இன்று முக்கிய கட்டத்திற்கு வந்துள்ளோம். போர், அரசியல், இராஜதந்திரம் அனைத்தும் தமிழ்த்தேசியத்தின் பலத்தின் வெளிப்பாடு. இம் மூன்றிலுமே தமிழீழ விடுதலைப்புலிகள் தமது உயர்வினை வெளிப்படுத்தியுள்ளனர். எனவேதான், தமிழீழ விடுதலைப்புலிகள் தமிழ்த்தேசிய இனத்தின் ஏகப் பிரதிநிதியாக உயர்ந்து நின்கின்றார்கள். இதை சர்வதேசம் நன்கு புரிந்துள்ளது.

சிங்கள பேரினவாதத்தை மையப்படுத்திய அரசியல் கலாசாரமோ, நிரந்தர சமாதானத்திற்கான இணக்கப்பாட்டினை எட்டுவதற்குத் தொடர்ந்தும் தடைகளை ஏற்படுத்திவருகிறது. கடந்தகால, அண்மைக்கால பேரினவாத வரலாற்றின் தொடர்ச்சியே இத்தடைகள். ஆனால் இன்று சர்வதேச சமூகம் தமிழ்த் தேசியத்தின் அபிலாஷைகளை கூர்ந்து நிதானமாக கவனிக்கிறது. தமிழ்பேசும் மக்களினது சுயநிர்ணய வாழ்வுரிமைக்கான நியாயப்பாட்டை சந்தேகமின்றி புரிந்துகொண்டுள்ள இவ் வேளையில் இதை உறுதிப் படுத்த வேண்டியவர்கள் நாம்.

தமிழ் பேசும் மக்களின் கருத்தொருமைப்பாட்டின் அவசியம் அதன உறுதிப்படுத்தல் சர்வதேசத்தின் கண்ணோட்டத்தில் பெரும் மாற்றங்களை ஏற்படுத்தவல்லவை, நல்லவை. எனவேதான், அனைத்து நிலைமைகளையும் எமக்கு சாதகமாக்குவோம். இதுவே தேசியம், தாயகம், தன்னாட்சி உரிமை என்பவையே நிரந்தர- நீடித்த சமாதானத்திற்கு வழிகோலுமம.

இவையே எமது பிறப்புரிமை வாழும் உரிமை என்பதையும். இவையே எமது அரசியல், சமூக, பொருளாதார இலட்சியமென்பதையும் கோடிட்டுக்காட்டும் நேரமும், காலமும், களமும் இதுவாகும்.

எமது நிலத்தில் எமது பலத்தில் எமது தலைவிதியை நாமே தீர்மானித்துக்கொள்ளும் சூழ்நிலையை உருவாக்குவோம். அந்த உன்னதமான, சுதந்திரமான இலட்சிய வாழ்வைநோக்கி தமிழ் பேசும் மக்கள் உன்னதமான தேசியத் தலைமையில் அணி திரண்டுவிட்டோம். இந்த வரலாற்றுச் சந்தர்ப்பத்தில் எமது உரிமையை சர்வதேச சமூகம் மீட்டுத்தராவிட்டால் போரின் மூலம நாம் அதனை வென்றெடுக்க உயர் தர்மத்தையும் ,நீதியையும், நியாயத்தையும் கொண்ட தேசிய விடுதலைப் பிரயாணத்தில் அர்ப்பணிப்புடன் பயணிப்போம். தமிழ்த் தேசியத்தின் இலக்கினை உறுதி செய்வோம். வரலாற்றில் இடம்பெறுவோம்.

வாரீர் வாரீர்!! வாரீர்!!! என அவ்வறிக்கையில் குறிப்பிட்டுள்ளது. (ற)

## அல்லைப்பிட்டியில் கலந்துரையாடல்

(மானிப்பாய்)

மானிப்பாய் பரிஸ் லியோ கழகதின் ஏற்பாட்டில் விழி உளசமூக மேம்பாட்டு அமையத்தினால் மதுபாவனை, அதனால் ஏற்படும் பொருளாதார உடல் நல பிரச்சினைகள் பற்றிய விழிப்புணர்வுக் கலந்துரையாடல் கடந்த ஞாயிற்றுக்கிழமை அல்லைப்பிட்டிக் கிராமத்தில் நடாத்தப்பட்டது.

இக்கலந்துரையாடலில் சு[illegible] 150 இற்கும் மேற்பட்ட மக்கள் கலந்துகொண்டு பயனடைந்தனர். தீவகத்தில் மக்கள் அதிகளவில் மீளக்குடியமர்ந்த இடங்களில் அல்லப்பிட்டி முதன்மையானதென்பது இங்கு குறிப்பிடத்தக்கது. (த.28)

# பேரினவாதிகளின் கைதியான மகிந்த யுத்தத்திற்கே நாட்டை நகர்த்துகிறார்

## ஐ.தே.கட்சி சுட்டிக்காட்டு

(கொழும்பு)

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் பேரினவாத சக்திகளின் கைதியாக மாறியுள்ளதாக ஐக்கிய தேசியக்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் ஜோன்ஸன் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

இச் சக்திகளின் கைகளில் சிக்கியுள்ள அவர் இந்த நாட்டினை மீண்டும் யுத்தத்தினை நோக்கி நகர்த்திக்கொண்டிருப்பதாகத் தெரிவித்தார்.

குருநாகலில் இடம்பெற்ற வைபவம் ஒன்றில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

பிரதமர் மகிந்த ராஜபக்ஷ யுத்த நடவடிக்கையை முற்றாக நிராகரிப்பதாகக் கூறிக்கொள்ளும் அதேவேளை, ஜே.வி. பி.மற்றும் ஜாதிகஹெல உறுமய ஆகியவற்றுடன் ஏற்படுத்திய உட[illegible]பாட்டு விடயங்களுக்கு அமைய இந்நாட்டினை பிரிவினை வாத யுத்தத்திற்கு இட்டுச்செல்ல முற்படுவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (ற-4)






# இரத்த வங்கிக்கு உலக தரிசன நிறுவனம் வாகனம் அன்பளிப்பு

படங்கள்:- யதார்த்திகன்

யாழ்.போதனா வைத்தியசாலையில் இரத்த வங்கிக்கு உலக தரிசன நிறுவனத்தினால் முற்றிலும் குளிரூட்டப்பட்ட 29 ஆசனங்களைக் கொண்ட புதிய பஸ் ஒன்று அன்பளிப்பாக வழங்கப்பட்டுள்ளது.

வைபவ ரீதியாக கையளிக்கும் நிகழ்வு நேற்று காலை 11.00 மணிக்கு யாழ்.போதனா வைத்திய சாலையில் நடைபெற்றது. இந் நிகழ்வில் யாழ்.போதனா வைத்தியசாலையின் பதில் பணிபபாளர்களான வைத்திய கலாநிதி கணேசமூர்த்தி ,வைத்திய கலாநிதி உமாபதி, ஆகியோரும் உலக தரிசன நிறுவனத்தின் திட்டப் பணிப்பாளர் ஆன்மேரியா பொனேயும், சிரேஷ்ட திட்ட அலுவலர் லிடியா, வட வலய முகாமையாளர் மனுவல், திட்ட அலுவலர் கரினிடயஸ், வட வலய செயற்பாட்டு முகாமையாளர் நைல்ஸ், யாழ்.மாவட்ட முகாமையாளர் ரி.வசந்தநாயகம், ஆகியோரும், யாழ்.போதனா வைத்திய சாலை இரத்த வங்கியின் பொறுப்பதிகாரி வைத்திய கலாநிதி சிவசங்கர், வைத்திய கலாநிதி அகிலன் ஆகியோரும் கலந்துகொண்டார்கள்.

யாழ்.போதனா வைத்தியசாலையின் இரத்த வங்கியானது நடமாடும் சேவையினை மேற்கொள்வதற்கு வாகன வசதியில்லாததை இலங்கைக்கான உலக தரிசன நிறுவனத்தினூடாக பின்லாந்து உலக தரிசன நிறுவனத்திற்கு வேண்டுகோள் விடுத்திருந்ததையடுத்து பின்லாந்து உலகதரிசன நிறுவனத்தினூடாக முற்றிலும் குளிரூட்டபபட்ட பஸ் ஒன்று நேற்று வழங்கப்பட்டுள்ளது.

(அ-19.12)

# சேது கால்வாய்த் திட்டத்தினால் யாழ்ப்பாணம், மன்னாருக்கு ஆபத்து

## பசுமை இயக்கம் எச்சரிக்கை

(கொழும்பு)

இந்திய அரசின் சேதுகால்வாய்த திட்டத்தால் ஆசிய அளவிலான ஆழிப்பேரலை ஏற்படக் கூடும் என்று இலங்கை பசுமை இயக்கத்தின் நிர்வாகி சுரஞ்சன் கொடித்துவக்கு எச்சரிக்கை விடுத்துள்ளார்.

இது குறித்து அவர் கூறுகையில்,

கடந்த டிசம்பர் 26ஆம் திகதி ஏற்பட்ட ஆழிப்பேரலையால் இலங்கையின் தென் மற்றும் கிழக்கு கடற்கரைப் பிரதேசங்களே பாதிக்கப்பட்டுள்ளன. இந்தியாவின் சேது கால்வாயால் ஆசிய ஆழிப்பேரலை ஏற்பட வாய்ப்பு உண்டு. இது யாழ்ப்பாணத்தையும் மன்னாரையும் கடுமையாகப் பாதிக்கும் என்றார்.

இதனிடையே சேதுகால்வாய்த் திட்டத்தைத் தடுக்க வலியுறுத்தி ஜனாதிபதி வேட்பாளர் இருவரிடமும் மீனவர் அமைப்புகள் சார்பாக கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளன. இது தொடர்பாக 50 ஆயிரம் கையெழுத்துக்களைத் திரட்டி இரு ஜனாதிபதி வேட்பாளர்களிடமும் கைய[illegible]ளிக்க உள்ளதாக மீனவர் நலனுக்கான சர்வதேச அமைப்பின் தலைவர் ஹெர்மன் குமார கூறினார்.

கடந்த மே 30ஆம் திகதி கொழும்பில் கூட்டப்பட்ட சூழலியலாளர் மாநாட்டில் சேதுகால்வாய்த் திட்டத்துக்கு கடும் எதிர்ப்புத் தெரிவிக்கப்பட்டது.

அதேபோல் அண்மையில் யாழ்ப்பாணத்தில் வடக்கு-கிழக்கு மனித உரிமைகள் செயலகம் நடத்திய கருத்தரங்கு ஒன்றிலும் சேதுகால்வாய்க்கு கடும் எதிர்ப்புத் தெரிவிக்கப்பட்டதுடன், விடுதலைப் புலிகளுடன் இந்திய அரசு பேச்சுக்களை நடாத்த வேண்டும் என்றும் வலியுறுத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ற)

## வழக்குத் தொடர்ந்த பெண்ணை காணவில்லை

மன்னாரில் உள்ள பொலிஸார் மீது வன்புணர்வு வழக்குத் தொடர்ந்த பெண் ஒருவரை காணவில்லை. மற்றொருவருக்கு கொலை அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த 2001ஆம் ஆண்டு மார்ச் மாதம் மன்னாரில் உள்ள பொலிஸார் 12பேர் தங்களை வன்புணர்வுக்குள்ளாகியதாக திருமதி ஏகாம்பரம் விஜகலா, திருமதி சின்னத்தம்பி சிவகாமி ஆகியோர் புகார் கொடுததனர்.

பொலிஸ் விசாரணையில் இருந்தபோதே இச்சம்பவம் நடந்ததாக அவர்கள் தெரிவித்திருந்தனர். இது தொடர்பான வழக்கு அனுராதபுர உயர் நீதிமன்றத்தில் நடைபெற்று வந்தது.

இந்த வழக்கின் விசாரணை இன்று நீதிமன்றில் நடைபெற உள்ளது. இந்த நிலையில் புகார் கொடுத்த பெண்களில் ஒருவரான திருமதி ஏகாம்பரம் விஜிகலாவை காணவில்லை என்று மனித உரிமைகள் வழக்கறிஞர் எம்.ரெமிதியூஸ் கூறியுள்ளார்.

மற்றொருவரான சின்னத்தம்பி சிவகாமியையும் நீதிமன்றில் சாட்சியமளிக்கக்கூடாது என்று பொலிlார் கொலை அச்சுறுத்தல் விடுத்துள்ளதாக தெரிய வருகிறது. ற)

# அகில இலங்கை சித்தமருத்துவ பட்டதாரிகள் சங்கம் அங்குரார்ப்பணம்

(மானிப்பாய்)

அகில இலங்கை சித்த மருத்துவ பட்டதாரிகள் (BSMS/ DAMS) சங்கம் கடந்த ஞாயிற்றுக்கிழமை கைதடி சித்தமருத்துவத்துறையில் சித்தமருத்துறை தலைவர் டாக்டர் திருமதி பஞ்சராஜா தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் அமைக்கப்பட்டது.

சித்தமருத்துவத்துறைத் தலைவர் மற்றும் BSMS தனியார் மருத்துவர் ஒன்றியம் என்பவற்றின் வேண்டுகோளுக்கு இணங்க இச் சங்கம் உருவாக்கப்பட்டது. இக் கூட்டத்தில் BSMS, DAMS பட்டதாரிகள்கூடி சங்கத்தலைவராக பேராசிரியர் சு.பவானி, செயலாளராக டாக்டர் அ.அரவிந்தன் பொருளாளராக டாக்டர் இ.கேதீஸ்வரன் ஆகியோரும் மற்றும் நிர்வாக உறுப்பினர்களும் தெரிவுசெய்யப்பட்டனர்.

இச்சங்கம் சித்த மருத்துவம், சித்த மருத்துவ பட்டதாரிகள் சம்பந்தமான விடயங்களிலும் கவனம் செலுத்தும் .

அத்துடன், எதிர்வரும சனிக்கிழமை சித்தமருத்துவத்துறையில் பி.ப.2 மணியளவில் நடைபெறும் பொதுக்கூட்டத்தில் அனைத்து DAMS/BSMS பட்டதாரிகளையும் கலந்து சங்கத்தில் தமது உறுப்புரிமையை உறுதிசெய்யுமாறு கேட்கப்பட்டுள்ளது. (ற-26)

## கட்டாக்காலி நாய்கள் அழிப்பு

(மருதங்கேணி)

மருதங்கேணி பிரதேசத்திலுள்ள தாளையடி, மருதங்கேணி, ஆகிய பகுதிகளில் முதற்கடடமாக நாளை வியாழககிழமை கட்டாக்காலி நாய்கள் நஞ்சூட்டி அழிக்கப்படவுள்ளன.

மேற்படி பகுதியில் உள்ள இடைத் தங்கல் முகாம்களிலும் இந்நடவடிக்கை தொடரவுள்ளதால் இப்பகுதியில் உள்ளோர் தமது வளர்ப்பு நாய்களைக் கட்டிவைத்து ஒத்துழைக்குமாறு பருத்தித்துறை பிரதேசசெயலாளர் சி.பசுபதி வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இந்த நடவடிக்கையை அடுத்து வளர்பபு நாய்களுக்கு அடுத்தவாரம் விசர் நாய்த் தடுப்பூசி மருந்து ஏறறுவதற்கும் மருதங்கேணி சுகாதாரப் பிரிவு நடவடிக்கை எடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ற)

பொருளல்ல வற்றைப் பொருளென்று உணரும்
மருளானாம் மாணாப் பிறப்பு - குறள்

வலம்புரி

# பாராளுமன்றம் கலைபடுமா? பொதுத் தேர்தல் முதல்வருமா?

ஜனாதிபதித் தேர்தலுக்கான திகதியை தேர்தல் ஆணையாளர் உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளார்.

2006 ஆம் ஆண்டிலேயே ஜனாதிபதித் தேர்தலை நடத்தவேண்டுமென்ற நினைப்பிலிருந்த ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவிற்கு 2005 இல் தேர்தல் நடைபெறுவது கவலை தரக்கூடியதாகும்.

இருந்தும் உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பின் பிரகாரம் ஜனாதிபதித் தேர்தலை இந்த ஆண்டிலேயே நடத்தவேண்டிய சூழ்நிலை ஏற்பட்டுவிட்டது.

இதனால் தனக்கு இருக்கக்கூடிய நிறைவேற்று அதிகாரத்தை ஒருவருடத்திற்கு முன்னதாகவே சந்திரிகா குமாரதுங்க இழக்கின்றார்.

பதவியை இழப்பதன் ஊடாக அதிகாரமும் பறிபோவதால் சந்திரிகா குமாரதுங்கவின் அரசியல் எதிர்காலம் கடந்தகாலத்தைப் போலல்லாது மறைவு ஸ்தானத்திலேயே இருக்கப்போகிறது.

இதனை முன்கூட்டியே அவர் உணர்ந்து கொண்டதனாலேயே எப்பாடுபட்டாவது நிறைவேற்று அதிகாரம்கொண்ட ஜனாதிபதி ஆட்சிமுறையை இல்லாதொழிக்கவேண்டுமென முனைப்புடன் செயற்பட்டார்.

எனினும் அவரது காலத்தில் அது சாத்தியமற்றுப் போயிற்று. தன்னுடன் ஜனாதிபதி ஆட்சிமுறைக்கு முடிவுகட்ட நினைத்த சந்திரிகா குமாரதுங்கவின் பதவிக்காலம் முடிய இன்னும் 56 நாட்களே இருக்கின்றன.

விரல்விட்டு எண்ணக்கூடிய இந்த நாட்களுக்குள்ளாவது ஜனாதிபதி ஆட்சிமுறைக்கு ஆப்பு வைத்துவிடவேண்டுமென்பது அவரின் சிந்தனை.

அதற்கு இருக்கக்கூடிய ஒரேவழி பாராளுமன்றத்தைக் கலைத்து பொதுத் தேர்தலை நடத்துவதென அவர் கருதலாம்.

அதாவது பாராளுமன்றத்தைக் கலைத்து பொதுத் தேர்தலை நடத்துவதன் மூலம் பின்வரும் விடயங்களில் தனக்கு வெற்றிகிடைக்கும் என அவர் எதிர்பார்க்கமுடியும்.

அதாவது சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் ஜனாதிபதி வேட்பாளராக பிரதமர் மகிந்த ராஜபக்ஷவை பெருந்தன்மையோடு முன்மொழிந்த போதிலும், அதனை மதிக்காமலும் - கட்சியின் கொள்கைகளை மீறியும் - ஜே.வி.பி, ஜாதிக ஹெல உறுமய போன்றவற்றுடன் கூட்டுச்சேர்ந்துள்ளார்.

இந்நிலையில் பொதுத் தேர்தலை நடத்துவதன் மூலம் ஜனாதிபதி வேட்பாளரிலிருந்து மகிந்த ராஜபக்ஷவை விலக்கிவிடமுடியும். அதே நேரம் தனது ஆட்சியில் இணைந்து அமைச்சர் பதவிகளையும் பெற்றுவிட்டு தக்கநேரத்தில் கைகழுவிவிட்டுப்போன ஜே.வி.பிக்கும் பாடம் புகட்ட பாராளுமன்றத்தைக் கலைத்து பொதுத் தேர்தலை நடத்துவது ஒருவழியாகும்.

இந்த இரண்டு விடயங்களையும் தனது பதவியின் இறுதிக்காலத்தில் செய்துவிட ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க இம்மியும் தயங்கமாட்டார் எனக் கூறிக்கொள்ளலாம்.

## ஜே.வி.பி - ஹெல உறுமய முரண்பாடு ஒருபுறம் ஜனாதிபதி, அனுராவின் கண்டனங்கள் மறுபுறம்

# திண்டாட்டத்தில் பிரதமர் மஹிந்த

(கொழும்பு)

ஜனாதிபதி மற்றும் வெளிவிவகார அமைச்சர் அனுரா பண்டாரநாயக்க ஆகியோரின் கருத்துக்களால் பிரதமர் மஹிநத ராஜபக்ஷவுக்கு ஆதரவு வழங்கும் தரப்பினர் குழப்ப நிலைக்கு உள்ளாகியிருப்பதாக ஐக்கிய தேசியக் கட்சிதெரிவித்துள்ளது.

ஜனாதிபதி வேட்பாளர் மஹிந்த ராஜபக்ஷவை குற்றம் சாட்டி கூறப்பட்டுள்ள இந்தக் கருத்துக்கள் காரணமாக நாட்டு மக்கள் பாரிய சிக்கல்களை எதிர்நோக்கியிருப்பதாக ஐக்கிய தேசியக் கட்சயின் நாடாளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் ஜீ.எல். பீரிஸ் தெரிவித்துள்ளார்.

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ கட்சிகளுடன் மேற்கொண்டுள்ள ஒப்பநதங்கள் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியன் கொள்கைகளுக்கு ஏற்புடையதாக இருந்தால் மட்டுமே தாம் ஆதரவு வழங்குவதாக அமைச்சர் அனுரா பண்டாரநாயக்க தெரிவித்துள்ளார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் மஹிநத ராஜபக்ஷ ஜே.வி.பி ,ஜாதிக ஹெல உறுமய ஆகிய கட்சிகளுடன் ஒப்பந்தங்களை மேற்கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

அமெரிக்கா சென்றுள்ள ஜனாதிபதி நாடு திரும்பியதும் ஜனாதிபதி தேர்தலுக்கான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் கொள்கைகளை தயாரிக்கவிருப்பதாக தெரிவிக்கப்படுகின்றது.

தயாரிக்கப்படவிருக்கும் கொள்கைகளுக்கும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ மேற்கொண்டுள்ள ஒப்பந்தங்களுக்கிடையில் காணப்படும விடயங்களில் இணக்கம் ஏற்படவில்லை என்றால் சிக்கல் ஏற்படலாம் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

இவ்வாறான நிலையில், ஜனாதிபதியின் கொள்கைகளுக்கு பிரதமர் இணங்குவார். ஆனால் பிரதமருடன் ஒப்பந்தங்களை செய்து கொண்டுள்ள கட்சிகள் சிக்கல்களை எதிர் நோக்கக்கூடும் என்று ஐக்கிய தேசியக் கட்சி தெரிவித்துள்ளது. இந்த விடயம் பாரிய அரசியல் சிக்கலாகும்.

இது தொடர்பாக ஜே.வி.பி. கருத்துத் தெரிவிக்கையில், அவ்வாறான நிலையேற்பட்டால் அதனை எதிர்கொள்வதாக தெரிவித்த கட்சியின் பிரசாரச் செயலாளர் விமல் வீரவன்ஸ, ஜனாதிபதி, பிரதமர் தொடர்பில் கடுமையான செயற்பாட்டை முன்னெடுப்பார் என்று தாம் நம்பவில்லையெனவும் தெரிவித்துள்ளது.

இதேவேளை, இது குறித்து கருத்து தெரிவித்த ஜாதிக ஹெல உறுமயவின் பிரதித்தலைவர், தாம் ஆதரவு வழங்கியது ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சிக்கு அல்ல, பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவுக்கே தமது கட்சி ஆதரவு வழங்கியது எனக் குறிப்பிட்டார்.

இதற்கு ஜனாதிபதி எதிர்ப்பு தெரிவிப்பாரானால் மஹிந்தவை வெற்றி பெறச் செய்வதற்கு ஜாதிக ஹெல உறுமய அவருக்கு பூரண ஆதரவு வழங்கும் என்றும் அவர் தெரிவித்தார்.

எவ்வாறாயினும்,வெளிவிவகார அமைச்சர் அனுரா பண்டாரநாயக்கவினால் அனுப்பப்பட்டதாகக் கூறப்படும் எவ்வித அறிக்கையோ கடிதமோ குறித்து தமக்கு எதுவும் அறிவிக்கப்படவில்லையென ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் பொதுச செயலாளர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்தார். (ற-9)

# அதிகாரப் பகிர்வின் ஊடான தீர்வின்றேல் தமிழீழத் தனியரசு உருவாவது உறுதி

## ருகுணு மக்கள்கட்சியின் செயலாளர் அருண சொய்சா

(கொழும்பு)

ஐக்கிய இலங்கைக்குள் அதிகாரப் பகிர்வின் மூலம் தீர்வைக்காண முன்வராவிட்டால் தமிழீழத் தனியரசு உருவாவது உறுதி என்று ருகுணு மக்கள் கட்சியின் செயலாளர் அருண சொய்சா தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் அருண சொய்சா கூறியதாவது,

ஜே.வி.பி.,ஹெல உறுமயவுடன் மஹிந்த ராஜபக்ஷ செய்து கொண்டுள்ள ஒப்பந்தம் நாட்டை யுத்தத்துக்கு இட்டுச் செல்வதாகவே அமைநதுள்ளது. ஒற்றை ஆட்சிக்குள் இனப்பிரச்சினைக்கு தீர்வைக்காண முடியாது. அதிகாரம் பகிரப்பட வேண்டியது அவசியமாகும.கொழும்பில் தேங்கிக் கிடக்கும் அதிகாரம் பரவலாக்கப்படவேண்டும்.

மஹிந்தவின் ஒப்பந்தங்களில் ஒற்றையாட்சியை பாதுகாத்தல் என்பது முதலாவது நிபந்தனையாகவுள்ளது. ஒற்றையாடசிக்குள் பிரச்சினைக்குத் தீர்வு காண முடியாது என்பதே யதார்த்தமானதாகும். ஐக்கிய இலங்கைக்குள் அதிகாரத்தினை பகிர்வதற்கு சிங்கள மக்கள் இணங்காவிட்டால் யுத்தம் ஆரம்பிக்கப்பட்டு நாடு பிரிவதுடன் தமிழீழம் உருவாவது உறுதியாகிவிடும். ஜாதிக ஹெல உறுமயவுடன் பிரதமர் மேற்கொண்ட ஒப்பந் தத்தின் மூலம் புலிகள் ஆயுதங்களை கீழே வைத்து தனிநாட்டுக் கோரிக்கையினை கைவிட்டால் மட்டுமே பேச்சுவார்த்தையினை ஆரம்பிக்க முடியும்.

விடுதலைப் புலிகள் ஆயுதங்களை கீழே வைப்பது சாத்தியமா? யுத்தத்தில் பெரும் இழப்புக்களை சந்தித்தமையினால்தான இறுதியாக சிங்களத் தரப்பும் தமிழ்த் தரப்பும் பேச்சுவார்த்தைக்கு இணங்கினார். மஹிந்தவின் போக்கு யுத்தத்தை மீண்டும் ஏற்படுத்துவதாகவே உள்ளது. நாட்டின் முக்கிய பிரச்சினையான இனப்பிரச்சினைக்கு தீர்வைக்காணாது எந்தப் பிரச்சினைக்கும தீர்வைக்காண முடியாது.இந்த யதார்த்தத்தினை அனைவரும் புரிந்துகொள்ள வேண்டும்.

கடந்த தேர்தல்களின் போது நாம் சந்திரிகா குமாரதுங்கவுக்கே ஆதரவளித்து வந்தோம். இம்முறை ரணில் விக்கிரமசிங்கவை ஆதரிககின்றோம். நாம் ரணில் விக்கிரமசிங்கவை ஆதரிப்பதற்கு ஒபபந்தங்கள் செய்யவில்லை. ஒப்பந்தங்கள் எல்லாம் வெறும் நாடகமாகும என்றார் அவர். (ற)

# சமாதான முன்னெடுப்புக்களை வலியுறுத்தி இன்று கொழும்பில் மாபெரும் பேரணி

(கொழும்பு)

அனைத்துலக சமாதான நாளை முன்னிட்டு இலங்கை தேசிய சமாதானப் பேரவை சமாதானப் பேரணியையும் ஒன்று கூடலையும் இன்று கொழும்பில் நடத்தவுள்ளது.

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் ரவிராஜ், இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் தலைவர் ஆறுமுகம் தொண்டமான், முஸ்லிம் காங்கிரஸ்தலைவர் ரவூப் ஹக்கீம் ஆகியோருக்கு இந்த நிகழ்வுகளில் கலந்து கொள்ளுமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

நீதியாகவும் சுதந்திரமாகவும் தேர்தலை நடத்துதல்,போர் நிறுத்த உடன்படிக்கையை தொடர்ந்தும் கடைப்பிடித்தல் யார் வெற்றி பெற்றாலும் ஓர் அடிப்படை இணக்கப்பாட்டை அடிப்படையாக வைத்து சமாதானப் பேச்சுக்களை முன்னெடுத்துச் செல்லல் போன்ற கோரிக்கைகள் அடங்கிய மகஜர் ஒன்றும் மஹிந்த ராஜபக்ஷ மற்றும் எதிர்க்கட்சித் தலைவர் ஆகியோரிடம் கையளிக்கப்படவுள்ளது.

இன்று நண்பகல் 12 மணிக்கு விகாரமகாதேவி பூங்காவிலிருந்து ஆரம்பமாகும் இப்பேரணி, 1-45 மணியளவில் புதிய நகரமண்டபத்தை வந்தடைந்ததும்,கூட்டம் இடம் பெறவுள்ளது இப்பேரணியில் நாட்டின் பல பாகங்களிலும் இருந்து ஆயிரக்கணக்கான மக்கள் பங்கெடுப்பர் என எதிர்பார்க்கப்படுகின்றது. (ற)

# ஐ. நா. வின் நிறைவேற்றுப் பணிப்பாளரை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க சந்தித்தார்

(கொழும்பு)

ஐக்கிய நாடுகள் சபையின் நிறைவேற்றுப் பணிப்பாளர் அன்எம் வெனிமனுடன் ஜனாதிபதி சந்திரிகா பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார்.

ஐக்கிய நாடுகள் சபையின் 60ஆவது பொது அமர்வில் கலந்துகொள்வதற்காக ஜனாதிபதி நியூயோர்க் சென்றிருந்த சமயமே இச் சந்திப்பு இடம் பெற்றுள்ளது.

இச் சந்திப்பின் போது விடுதலைப் புலிகள் அமைப்பினர் சிறுவர்களைப் படையில் சேர்த்துக்கொள்வது தொடர்பாக கிடைககும் தகவல்கள் பற்றியும் யுத்த நிறுத்த உடன் படிக்கை மீறப்படுவது தொடர்பாக சர்வதேச சமூகத்துக்கு அறிவுறுத்தும் அவசியம் தற்போது ஏற்பட்டுள்ளமை பற்றியும் இச் சந்திப்பின் போது ஆராயப்பட்டுள்ளது.

சிறுவர்கள் தொடர்பான ஜனாதிபதியின் கருத்துக்களுக்கும் ஆர்வத்துக்கும் பணிப்பாளர் நாயகம் இணக்கம் தெரிவித்துளளார்.

சிறுவர் துஷ்பிரயோகம் மற்றும் வன்முறைகள் ஆகியவற்றைத தடுத்து அவர்களை பாதுகாத்து சுதந்திரமாக வாழ்வதறகான உரிமையை உறுதி செய்வதற்காக மேற்கொள்ளப்பட்ட செயற்திட்டங்கள் குறித்து ஜனாதிபதி எடுத்துக் கூறினார். இந்தத் துறையில் இலங்கையின் வெற்றிக்கு தொடரான கொள்கை வகுத்தலும் அதனை செயற்படுத்துவதுமே காரணமென்றும் ஜனாதிபதி இந்தச் சந்திப்பின் போது விளக்கியுள்ளார். (த-8)

## தினசரி தியானம்



## விவேகச் சிந்தனைகள்

நமது உள்ளங்களை நாம் திறந்துவைப்போமாயின் இந்தப் பிரபஞ்சத்தில் உலவும் நல்ல எண்ணங்கள் அனைத்திற்கும் நாம் உரிமை உடையவர்களாவோம் அன்பு, அறம், புனிதம் இவை நம்மிடம் வளரும் தோறும் புறத்தேயும் அவற்றை மிகுதியாகக் காண்போம்.

சுவாமி விவேகானந்தர்

## இராணுவக் காவலரண் மீது நேற்றிரவு கைக்குண்டு வீச்சு

(திருமலை)

திருகோணமலை மாவட்டம் புல்மோட்டையில் உள்ள இராணுவக் காவலரண் ஒன்றின் மீது நேற்றிரவு மேற்கொள்ளப்பட்ட கைக்குண்டுத் தாக்குதலில் இரண்டு இராணுவத்தினர் படுகாயமடைந்துள்ளனர்.

காயமடைந்த இருவரும் திருமலை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இத்தாக்குதல் நடைபெற்று சிறிதுநேரத்தில் திருமலை - கண்டிவீதியிலுள்ள காந்தி நகரில் உள்ள காவலரண் மீதும் தாக்குதல் நடத்தப்பட்டதாகவும், எனினும் சேதமெதுவும் ஏற்படவில்லை எனவும் படைத்தரப்பு தெரிவித்துள்ளது. (ச-8)

## சேது சமுத்திரத் திட்டத்தை எதிர்த்து மன்னாரில் ஆர்ப்பாட்டம்

(கொழும்பு)

சேது சமுத்திரத்திட்டத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்து மன்னார் பிரதேச மீனவர்கள் நேற்று முன்தினம் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

மன்னார் மற்றும் கற்பிட்டி உள்ளிட்ட பல பிரதேசங்களைச் சேர்ந்த மீனவர்கள் இந்த எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

சேதுசமுத்திர செயற்திட்டத்தினால் மீன்பிடிக் கைத்தொழில் மிகுந்த பாதிப்புக்குள்ளாகுதல் உள்ளிட்ட பல்வேறு பிரச்சினைகளை எதிர்நோக்கவேண்டியேற்படும் என மீனவர்கள் தெரிவித்தனர்.

இதனால் சேது சமுத்திரத்திட்டத்தை உடனடியாக கைவிடுமாறு மன்னார் பிரதேச மீனவர்கள் அதிகாரிகளுக்குக் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையிலான பாக்கு நீரிணையை ஆழப்படுத்துவதன் மூலம் கடற்போக்குவரத்து மார்க்கம் ஒன்றை உருவாக்குவதே சேதுசமுத்திரத் திட்டத்தின் நோக்கமாகும்.

இந்தியாவின் கிழக்கு மற்றும் மேற்குப் பகுதிகளுக்கிடையிலான கடற்போக்குவரத்து நடவடிக்கைகளை இலகுபடுத்தும் நோக்குடனேயே இந்தத் திட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (து-7)

## சமாதானத்தை....

கையளிக்கப்படவுள்ளது.

நண்பகல் 12 மணிக்கு விகாரமாதேவி பூங்காவிலிருந்து ஆரம்பமாகும் இப்பேரணி 1.45 மணியளவில் புதிய நகர மண்டபத்தை அடைந்ததும் கூட்டம் இடம்பெறவுள்ளது.

இப்பேரணியில் நாட்டின் பல பாகங்களிலும் இருந்து ஆயிரக்கணக்கான மக்கள் பங்கெடுப்பரென எதிர்பார்க்கப்படுகிறது. (ச-8)

## கிழக்கு....

ஆர்ப்பாட்டம் மேற்கொள்ளப்பட்டது.

நேற்றுக்காலை 11 மணிக்கு ஒன்றுகூடிய ஆயிரத்துக்கும் மேற்பட்ட மாணவர்கள் சுமார் 3 மணிநேரம் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட மாணவர்கள் வீதிக்குக் குறுக்கே ரயர்களைப் போட்டு எரித்தனர். இதனால் மட்டக்களப்பு - கொழும்புப் போக்குவரத்துக்கள் ஆர்ப்பாட்டம் முடியும் வரை இடைநிறுத்தப்பட்டிருந்தது.

ஏறாவூர் உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் கிரிகலவுடன் சம்பவ இடத்திற்குச் சென்ற பெருமளவான பொலிஸார் மாணவர்கள் மீது கண்ணீர்ப்புகைக் குண்டுகளை வீசி அவர்களைக் கலைக்கமுற்பட்டனர்.

எனினும் மாணவர்கள் தமது முயற்சியிலிருந்து பின்வாங்கவில்லை. சம்பவ இடத்திற்குச் சென்ற கிழக்குப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் ரவீந்திரநாத் மாணவர்களுடன் கலந்துரையாடியதையடுத்து போராட்டம் முடிவுக்கு வந்தது. (ச-8)

## தடுத்துவைக்கப்....

தடுத்துவைக்கப்பட்டுள்ள பொலிஸ் உதவி ஆய்வாளர் பொவிற்றகொட (வயது 35) மற்றும் கே.ஏ.டி.சரத் (வயது 39), ஹேமந்த (வயது 30) ஆகிய மூவருடனும் நேற்றுக் காலை 10 மணிமுதல் சுமார் 4 மணிநேரம் அவர்களது பெற்றோர் கலந்துரையாடினர். (ச-8)

## வவுனியா சென்ற இரு இளைஞர்களை காணவில்லையென முறையிடப்பட்டுள்ளது

யாழ்ப்பாணத்திலிருந்து வவுனியா சென்ற இரு இளைஞர்களைக் காணவில்லை என இலங்கை மனிதஉரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். அலுவலகத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இம்மாதம் 17 ஆம் திகதி ஹயஸ் வானில் வவுனியாவுக்குச் சென்ற இருவரையே காணவில்லை என முறையிடப்பட்டுள்ளது.

மானிப்பாயைச் சேர்ந்த யோகநாதன் சசிதரன் (வயது 25), கதிரமலை துஸ்யந்தன் (வயது 25) ஆகிய இரு இளைஞர்களுமே காணாமல் போனவர்களாவர்.

வவுனியா சென்ற இவ்விரு இளைஞர்களும் அங்கு கடையொன்றில் பொருட்கள் வாங்கியதாகவும், அதன் பிற்பாடு அவ்விருவரையும் வானுடன் காணாமல்போயுள்ளனரென அவர்களது பெற்றோர்கள் நேற்று இலங்கை மனிதஉரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். அலுவலகத்தில் முறைப்பாடு செய்துள்ளனர். (ச-19)

## சிறுமி மீதான பாலியல் குற்றச்சாட்டு வழக்கு விரிவுரையாளருக்கு விளக்கமறியல் நீடிப்பு

(யாழ்ப்பாணம்)

வீட்டுப் பணிப்பெண்ணான சிறுமியை பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தினார் என்ற குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்டு யாழ். சிறைச்சாலையில் தடுத்துவைக்கப்பட்டுள்ள யாழ். பல்கலைக்கழக விரிவுரையாளர் தொடர்பான வழக்கு நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

யாழ். மாவட்ட மேலதிக நீதிவான் ஸ்ரீநிதி நந்தசேகரம் முன்னிலையில் அவர் ஆஜர் படுத்தப்பட்டார்.

குற்றவாளியை நீதிமன்றில் ஆஜர்படுத்திய வேளையில் அவ்வழக்குத் தொடர்பான விசாரணைகள் பூரணமாக முடியாததால் வழக்கு ஒக்டோபர் 3 ஆம் திகதிவரை ஒத்தி வைக்கப்பட்டது. (ச-19,43)

## இலங்கையில் நிலவும் இனப்பிரச்சினைக்கு...

தேர்தலின் பின்னர் வன்முறைகள், அநாவசிய அறிக்கைகளை வெளியிடல், சமாதான செயற்பாடுகளுக்கு முரணான நடவடிக்கைகளில் ஈடுபடல் போன்ற செயற்பாடுகளை சகல தரப்பினரும் தவிர்த்துக்கொள்ள வேண்டும் என வலியுறுத்தியுள்ளது.

வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமரின் கொலையானது விடுதலைப் புலிகளுடனான சமாதான முயற்சிகளில் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளன. கதிர்காமரின் கொலை யோக்கியமற்ற செயலாகும். இக்கொலையுடன் விடுதலைப் புலிகளை குற்றஞ்சாட்டமுடியாது.

போர்நிறுத்த உடன்படிக்கையைத் தொடர்ந்தும் கடைப்பிடிப்பது தொடர்பாக இலங்கை அரசாங்கத்திற்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையில் நேரடிப் பேச்சுக்களை ஆரம்பிப்பதற்கான முயற்சிகளில் நோர்வே தொடர்ந்தும் ஈடுபட்டுள்ளது.

இதனை நாம் பாராட்டுகின்றோம். இதற்கமைய கண்காணிப்புக்குழுவின் முன்னாள் தலைவர் டொன்ட் புறூவ் ஹொவ்டேயை அடுத்தமாதம் இலங்கைக்கு அனுப்பிவைக்க நோர்வே எண்ணியுள்ளது.

இந்த விஜயத்தின்போது இலங்கை அரசாங்கத்துடனும், விடுதலைப் புலிகளுடனும் டொன்ட் புறூவ் ஹொவ்டே பேச்சில் ஈடுபடுவார் என்றும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

2002 ஆம் ஆண்டு அரசாங்கத்திற்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே கைச்சாத்திடப்பட்ட யுத்தநிறுத்த உடன்படிக்கையைப் பாதுகாப்பதிலேயே சமாதான முயற்சிகள் தங்கியுள்ளன.

தொடர்ச்சியாக இடம்பெற்றுவரும் வன்முறைகளே யுத்தநிறுத்தத்தை அச்சுறுத்தலுக்கு உள்ளாக்கியுள்ளன.

யுத்தநிறுத்த உடன்படிக்கையை சரியான வகையில் அமுல்படுத்துவது அரசாங்கத்தினதும், விடுதலைப் புலிகளதும் கடமையாகும். சமாதான நடவடிக்கைகளில் விடுதலைப் புலிகள் அக்கறையுடன் பங்களிப்பு வழங்குவதை வெளிப்படுத்தக்கூடிய வகையில் செயற்படவேண்டும்.

அரசியல் படுகொலைகள் உட்பட அனைத்துப் படுகொலைகளையும் அவர்கள் நிறுத்தவேண்டும். சிறுவர்களைப் படையில் சேர்ப்பதை நிறுத்தவேண்டும். அத்துடன் யுத்தநிறுத்த உடன்படிக்கைக்கு அமைய வடக்குக் கிழக்கில் இயங்கும் ஆயுதக்குழுக்களின் ஆயுதங்களைக் களைய அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவேண்டும் என அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-8)

## பொதுமக்களின்....

சமாதானத் தீர்வு காணப்படும் என்று கூறினார்.

இதேவேளை சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் மகிந்த ராஜபக்ஷவின் முதலாவது தேர்தல் பிரசாரக் கூட்டம் நேற்று ஆரம்பமானது.

கொழும்பு நகரசபை மண்டபத்தில் ஆரம்பமான இக் கூட்டத்தில் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவும், வெளிவிவகார அமைச்சர் அநுரா பண்டாரநாயக்கவும் கலந்துகொள்ளவில்லை.

எனினும் அவருக்கு ஆதரவு வழங்குவதாக உறுதியளித்துள்ள ஜாதிக ஹெலஉறுமய மற்றும் ஜே.வி.பியின் தலைவர்கள் மற்றும் முக்கிய உறுப்பினர்கள் கலந்துகொண்டனர். (ச-8)

## பொலிஸாரின்....

கிளிநொச்சி நீதிமன்றத்தில் ஆஜர்செய்யப்படுவார்கள். அன்று கண்காணிப்புக்குழுப் பிரதிநிதிகளும் நீதிமன்றத்திற்கு வருகைதருவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

பொலிஸார் மூவரையும் விரைவில் விடுதலைசெய்ய நடவடிக்கை எடுக்குமாறு பாதுகாப்பு அமைச்சு கண்காணிப்புக்குழுவைக் கேட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இது இவ்வாறிருக்க பொலிஸார் விடுதலை குறித்து அரச சமாதான செயலகத்தின் நேற்று உயர்மட்டக் கூட்டமொன்றும் இடம்பெற்றுள்ளது. (ச)

## தேர்தல்....

பொலிஸாரும் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

வன்முறையற்ற தேர்தலை நடாத்துவதற்காக மேலதிக பொலிஸாரும் பாதுகாப்புப் படையினரும் விரைவில் பணிகளில் ஈடுபடுத்தப்படுவர் என்று கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன. (ச-8)

## மார்புநோய் சிகிச்சை நிலையம் இன்று பண்ணைக்கு இடமாற்றம்



(யாழ்ப்பாணம்)

யாழ். போதனா வைத்தியசாலையில் இயங்கிவந்த மார்புநோய் சிகிச்சை நிலையம் இன்றிலிருந்து பண்ணைப்பகுதியில் இயங்கவுள்ளது.

பண்ணையிலுள்ள சுகாதாரக் கிராமத்தில் புதிதாக அமைக்கப்பட்ட கட்டடத்தில் இந்நிலையம் இயங்கவுள்ளதாக யாழ். மாவட்ட காசநோய் தடுப்பு வைத்திய அதிகாரி சி. ஜமுனாநந்தா தெரிவித்தார். (ச)

மனோகரா



புதிய வெளியீடு

சிம்பு, கோபிகா மற்றும் பலர் நடித்த

தொட்டி ஜெயா

கா.நே: 10.30, 2.30, 6.30, 9.30

நாதன்ஸ் சினிமா

குளிரூட்டப்பட்டது யாழ்ப்பாணம்

மணிகண்டன், சிம்ரன், ஜெய்ஆகாஷ் நடித்த

கிச்சா வயசு 16

கா.நே: 10.30, 2.30, 6.30, 9.30 (பு.நே)

நிறைஞ்சனாஸ் சங்கானை

ஜெய் ஆகாஷ், பிரணதி நடித்த

குருதேவா

கா.நே: 11.00, 02.45, 6.00 (பு.நே)

பதவி வெற்றிடம்

- அலுவலகச் செய்தியாளர்கள் (உள்ளகம்) :- பெண்கள் மட்டும்

தகைமை:- க.பொ.த. உயர்தரத்தில் சித்தி

- பாதுகாப்பு உத்தியோகத்தர் :-(இருபாலாரும்)

தகைமை: தரம் 10

- பத்திரிகை விநியோகஸ்தர்கள் (சொந்தமாக மோட்டார் சைக்கிள் வைத்திருப்பவர்கள்)
- சிற்றூழியர் :- (தேநீர் தயாரிப்பவர் -இரவுக்கடமை)

குறிப்பு: யாழ்.நகர மையத்தில் இருந்து 8கி.மீற்றர் தூரத்திற்குள் வசிப்பவர்கள் மட்டும்

பொருத்தமானவர்கள் 23.09.2005 வெள்ளிக்கிழமை பிற்பகல் 3மணிக்கு நேரில் வரவும்

2-ம் ஒழுங்கை
பிறவுண் வீதி யாழ்ப்பாணம்.

நிர்வாக உத்தியோகத்தர்
வலம்புரி

இப் பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3 இரண்டாம் ஒழுங்கை, பிறவுண்றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 21.09.2005 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.